ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2496 - 2026 ජූලි මස 03 වැනි සිකුරාදා - 2026.07.03

2496 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2112 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2139 |

**கவனிக்க.-** இலங்கை கல்வாரி தேவஸ்தானம் கூட்டிணைத்தல் (திருத்தம்) சட்டமூலம் 2026.06.26 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, யூலை மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, யூலை மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2109 - B 82806 (2026/07)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ்மொழி பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - யாழ்ப்பாணம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவி ஊதியம் வழங்கப்படாத சேவையாவதுடன் இதற்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

4. இளைப்பாற்றும் உச்ச வயதெல்லை 65 ஆண்டுகள் ஆவதுடன் வயது 65 தொடக்கம் 70 வரை, பதிவாளரினால் மேற்கொள்ளப்படும் சேவையின் திருப்தித்தன்மை மற்றும் உடல், மன உறுதி ஆகியவற்றிற்கு அமைய ஆண்டுதோறும் சேவைக்காலம் நீடிக்கப்படும் அவ்வாறு சேவைக் காலம் நீடிக்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த பதிவாளரின் சேவை முடிவுறுத்தப்படும்.

5. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

6. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.**- க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடயப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

7. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

8. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

9. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

10. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026, யூலை மாதம் 27 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

எஸ். ஜலதீபன்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2026, யூன் 13.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | வேலனை | புங்குடுதீவு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வேலனை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ்மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | தெல்லிப்பழை | மயிலிட்டி பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வலி வடக்கு (தெல்லிப்பழை) பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ்மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் |
| யாழ்ப்பாணம் | ஊர்காவற்றுறை | அனலைதீவு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் ஊர்காவற்துறை பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ்மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் |

07-20

---

**சுற்றாடல் அமைச்சு**

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்**

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத கடலோரக் காவலர் தரம் III – பிரிவு 2 – பதவிக்கான வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு- 2026

கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் துறையின், துறைசார் முகாமை உதவி யாளர், தொழில்நுட்பம் அல்லாத சேவை பிரிவில் III ஆம் தரத்தில் 09 கடலோரக் காவலர் பதவி களுக்கு, பின்வரும் தகுதிகளைக் கொண்ட ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்ய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. **பூர்த்தி செய்ய வேண்டிய தகுதி** :

(i) **கல்வித் தகுதி** :

பொதுக் கல்விச் சான்றிதழ் (சாதாரண) தேர்வில் ஒரே நேரத்தில் ஆறு (06) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும், மேலும் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதம் ஆகிய இரண்டு பாடங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(ii) **அனுபவம்** :

மேற்கூறிய கல்வித் தகுதியுடன், கரையோரப் ; பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத் துறையில், குறிப்பிட்ட தேதிக்கு முன்னர், தொடக்க நிலை தொழில்நுட்பம் அல்லாத அல்லது பகுதி தொழில்நுட்பப் பதவியில் 05 ஆண்டுகள் நிரந்தர மற்றும் செயல்மிகு சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும். அந்தந்தப் பதவிக்கான நியமனம் உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**குறிப்பு :**

ஒரு பதவியில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன்னர் பணியாற்றிய பயிற்சிக் காலமோ அல்லது ஒரு பதவியில் நிரந்தர நியமனத்திற்கான நிபந்தனையாகப் பணியாற்றிய காலமோ, மேலே குறிப்பிடப்பட்ட தகுதிபெறும் ஐந்தாண்டு காலத் திற்குள் கணக்கிடப்படமாட்டாது. மேலும், ஒரு குறிப்பிட்ட பதவியில் நிரந்தர நியமனம் பெறுவதற்கு முன்னர் பணியாற்றிய தற்காலிக/சாதாரணப் பணிக் காலமும், மேலே குறிப்பிடப்பட்ட தகுதிபெறும் ஐந்தாண்டு காலத்திற்குள் கணக்கிடப்படமாட்டாது.

(iii) **தொழில்முறைத் தகுதி** : பொருந்தாது.

(iv) **உடல் தகுதி :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும், பதவியின் கடமை களைச் செய்யவும் நல்ல உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்.

(v) மற்றவை :

(அ) விண்ணப்பதாரர்கள் சிறந்த குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.

(ஆ) கடந்த ஐந்தாண்டுகளில் திருப்திகரமான சேவையை நிறைவுசெய்திருக்க வேண்டும், ஊதிய உயர்வு பெற்றிருக்க வேண்டும் மற்றும்

திருப்திகரமான அல்லது அதற்கு மேற்பட்ட செயல்திறனை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

(இ) விண்ணப்பங்களை கோரும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள், பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகுதிகள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(vi) **வயது** : பொருந்தாது.

03. **ஊதிய விகிதம்** :

பொது நிர்வாக சுற்றறிக்கை எண் 10/2025, நாள் 25.03.2025 - இன் படி, மாத ஊதிய விகிதம் :

ரூ.45,230 - 10 x 540 - 11 x 630 - 10 x 890 – 10 x 1190 - ரூ.78,360.00 ( MN 1 – 2025 ).

04. பொதுவான வேலைவாய்ப்பு விதிமுறைகள் மற்றும் சேவை நிபந்தனைகள் :

(அ) கடலோரக் காவல்படை தரம் III க்கு பதவி உயர்வு பெற தகுதியுள்ள அதிகாரிகளின் பதவி நிரந் தரமானது. ஓய்வூதியம் வழங்கப்படும். (ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசாங்கம் எடுக்கும் எதிர்கால கொள்கை முடிவுகளுக்கு உட்பட்டது.)

(ஆ) நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

(இ) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மூன்று (03) ஆண்டுகளுக்குள் முதல் செயல்திறன் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

(ஈ) பொது நிர்வாக சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதனுடன் இணைந்த சுற்றறிக்கையின்படி, பொருத் தமான மொழித் திறன் பெற்றிருக்க வேண்டும்.

(உ) தேர்ந்தெடுக்கப்படும் அதிகாரிகள் நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்.

(ஊ) இந்த வெற்றிடங்கள் வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமை த்துவ பிராந்திய அலுவலகங்களில் மட்டுமே இருப்பதால், இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் படும் அதிகாரிகள், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ துறையின் பின்வரும் பிராந்திய அலுவலகங்களில் உள்ள வெற்றிடங்களுக்கு மட்டுமே நியமிக்கப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் பணியமர்த் தப்படும் பிராந்திய அலுவலகத்தையும், பணி யமர்த்தப்பட வேண்டிய அதிகாரிகளின் எண்ணிக் கையையும் தீர்மானிக்கவும் மாற்றவும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வளங்கள் முகாமை த்துவ தலைமை இயக்குனருக்கு உரிமை உண்டு.

| *தொடர் இல.* | *கடலோரக் காவலர் வெற்றிடங்கள் நிலவும் பிராந்திய அலுவலகங்கள்* | *நியமிக்கப் படவுள்ள உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் | 03 |
| 02 | திருகோணமலை பிராந்திய அலுவலகம் | 02 |
| 03 | அம்பாறை பிராந்திய அலுவலகம் | 02 |
| 04 | மட்டக்களப்பு பிராந்திய அலுவலகம் | 02 |
| நியமிக்கப்படவுள்ள உத்தியோகத்தர்களின் மொத்த எண்ணிக்கை | | 09 |

05. **பணியிடங்களுக்கான தேர்வு முறை :**

விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசித் தேதிக்குள் இப்பணியிடத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள், முறைப் படுத்தப்பட்ட நேர்காணலுக்குப் பிறகு பெற்ற மொத்த மதிப்பெண்களின் தகுதி வரிசைப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நியமிக்கப்படுவார்கள்.

முறைப்படுத்தப்பட்ட நேர்காணலுக்கான மதிப்பெண்கள் பின்வருமாறு வழங்கப்படும்.

| *தொடர் இல.* | *மதிப்பெண்கள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்* | *வழங்கப்படும் அதிகபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|
| 01 | மேலதிக கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதி | 60 |
| 02 | அனுபவம் | 15 |
| 03 | ஆங்கில மொழித் திறன் | 20 |
| 04 | நேர்காணலில் காட்டிய தகுதி | 05 |
| மொத்தம் | | 100 |

06. **விண்ணப்பிக்கும் முறை :**

இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதிக்கு 2026.08.03 இற்கு முன்னதாக, பதிவுத்

தபால் மூலமாகவோ அல்லது நேரில் கையளிக்கவோ வேண்டும். முகவரி பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம், அஞ்சல் பெட்டி 556, புதுப் பொதுச் செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. உறையின் மேல் இடது ஓரத்தில், “கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் கடலோரக் காவலர் தரம் III இற்கான வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு” எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்காத விண்ணப் பங்களும், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப் படும். (விண்ணப்பப் படிவத்தின் நகலை உங்களுடன் வைத்திருப்பது உதவியாக இருக்கும்)

07. **தகுதி ஆவணங்கள் :**

(அ) நேர்காணலுக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள், ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிப்பதன் மூலம் தங்கள் தகுதியை நிரூபிக்க வேண்டும்.

(ஆ) நேர்காணலின் போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகள் தேவைப்படும்.

i. பிறப்புச் சான்றிதழ்

ii. கல்வி மற்றும் தொழில்முறைத் தகுதியை நிரூபிக்கும் சான்றிதழ்

iii. தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் இலங்கை ஓட்டுநர் உரிமம்

iv. சமீபத்தில் பெறப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ்

v. இரண்டு நன்னடத்தைச் சான்றிதழ்கள்

vi. பிற தொடர்புடைய சான்றிதழ்கள்

08. **தவறான தகவல்களை வழங்குதல் :**

ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல், ஆட்சேர்ப்புக்கு முன்னர் தவறானது அல்லது பிழையானது என்று கண்டறிந்தால், அவரது விண்ணப்பம் ரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின்னர் அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், உரிய சட்ட நடவடிக்கைக்கு உட்பட்டு அவர் அரசாங்கப் பணியிலிருந்து நீக்கப்படலாம்.

09. இந்த ஒழுங்குமுறைகளில் உள்ளடக்கப்படாத வேறு எந்தவொரு தொடர்புடைய விடயமும், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் விருப்பப்படி தீர்மானிக்கப்படும்.

10. இதில் உள்ள சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில செய்திக் குறிப்புகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு இருப்பின், சிங்கள செய்திக் குறிப்பே செல்லுபடியாகும்.

பேராசிரியர் பி. பி. தனி பிரதீப் குமார
இயக்குநர் நாயகம்
கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள்
முகாமைத்துவத் திணைக்களம்.

அஞ்சல் பெட்டி 556,
புதிய பொதுச் செயலகம்,
மாளிகாவத்தை
கொழும்பு 10.
2026.06.23

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுற்றாடல் அமைச்சு**

**கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவத் திணைக்களம்**

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத கடலோரக் காவலர் தரம் III – பிரிவு 2 –பதவிக்கான வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு- 2026

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :

.............................................................................................................................................
.............................................................................................................................................

1.2 கடைசியில் வரும் பெயர் முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்கள் அதனைத் தொடர்ந்தும் வரக் கூடியதாக பெயர் : ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்

.............................................................................................................................................
.............................................................................................................................................

(உதா : GUNAWARDANA H.M.S.K)

02. 2.1 நிரந்தர வசிப்பிடம் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில் .......................................................

2.2 பிரதேச செயலகப் பிரிவு ...............................................................

2.3 கிராம சேவகர் பிரிவு..................................................................

2.4 தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

03.

3.1 தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

3.2 வழங்கப்பட்ட திகதி : [ ]

04.

4.1 பால்நிலை : ஆண் - 0 பெண் - 1 [ ]
(பொருத்தமானதை பெட்டிக்குள் குறிப்பிடவும்.)

5.

5.1 பிறந்த திகதி : ஆண்டு : [ ] மாதம்: [ ] திகதி : [ ]

5.2 விண்ணப்பம் கோரும் கடைசித் தினத்தின் போது வயது:

வருடங்கள் : [ ] மாதங்கள் : [ ] நாட்கள் : [ ]

6.1 நீங்கள் இலங்கை பிரஜையாக இருப்பது :

பரம்பரை மூலம் 1

பதிவின் மூலம் 2 [ ]

(பொருத்தமான இலக்கத்தை பெட்டிக்குள் குறிப்பிடவும்)

6.2 இனம் : [ ]

| | |
|---|---|
| சிங்களம் | 1 |
| இலங்கைத் தமிழ் | 2 |
| இந்தியத் தமிழ் | 3 |
| முஸ்லிம் | 4 |
| பறங்கியர் | 5 |
| வேறு | 6 |

(பொருத்தமானதை பெட்டிக்குள் குறிப்பிடவும் )

7. விவாக நிலை : திருமணமானவர்/ திருமணமாகாதவர்/ தாரமிழந்தவர் :

| | |
|---|---|
| திருமணமானவர் | |
| திருமணமாகாதவர் | |
| தாரமிழந்தவர் | |

8.

8.1 தற்போதைய பணியிடத்தின் பெயர்....................................................................

8.2 தற்போதைய பதவிப் பெயர் ..........................................................................

8.3 தற்போதைய பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி ....................................................

8.4 தற்போதைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி................................................

8.5 தற்போதைய பதவியில் 5 வருடம் நிரந்தர அல்லது செயல்பாட்டு சேவையை பூர்த்தி செய்த திகதி ..............................

09. ஏதேனும் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம்/இல்லை
ஆம் எனில், விவரங்களை குறிப்பிடவும் : ..............................................................................................................
..............................................................................................................................................................
..............................................................................................................................................................

10. க.பொத சாதாரண தர தேர்வு விவரங்கள் :
I. தேர்வு நடைபெற்ற ஆண்டு மற்றும் II. தேர்வு எண்

| I. தேர்வு நடைபெற்ற ஆண்டு………………… மற்றும் | II. தேர்வு எண்…………………. |
|---|---|
| பாடம் | தரம் |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

11. க.பொத உயர் தர தேர்வு விவரங்கள்

| I. தேர்வு நடைபெற்ற ஆண்டு………………… மற்றும் | II. தேர்வு எண்…………………. |
|---|---|
| பாடம் | தரம் |
| | |
| | |
| | |
| | |

12. வேறு கல்வித் தகுதிகள் :………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………………

13. விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள், எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன். நான் அளித்த தகவல்கள் பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், நான் ஆட்சேர்ப்புக்குத் தகுதியிழப்பேன் என்றும், நியமனத்திற்குப் பிறகு அது நிரூபிக்கப்பட்டால், நட்ட ஈடு எதுவும் இல்லாமல் பணியிலிருந்து நீக்கப்படுவதற்குப் பொறுப்பாவேன் என்றும் இதன்மூலம் நான் உறுதியளிக்கிறேன்.

……………………………….
திகதி :………… விண்ணப்பதாரரின் கையொப்பம்

திணைக்கள பொறுப்பாளரால் பூரணப்படுத்தப்பட வேண்டும்.

01. குறிப்பிட்ட விண்ணப்பதாரி மீது கடந்த ஐந்து வருடத்திற்குள் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டதா / எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ளதா?ஆம் / இல்லை

02. பதில் ஆம் என்றால் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

……………………………………………………………………………………………………………………………………
…………………………………………………………

03. விண்ணப்பதாரர் சேவைக் காலத்தில் சம்பளமற்ற விடுமுறை பெற்றுள்ளாரா? ஆம் / இல்லை

04. ஆம் என்றால் அவ்வாறு பெறப்பட்ட சம்பளமற்ற விடுமுறை நாட்களின் விபரம்

| இல. | விடுமுறை அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகள் | காலம் | |
|---|---|---|---|
| | | முதல் | வரை |
| i. | தாபனக் கோவை - V : 2 : 5 : 4 | | |
| ii. | தாபனக் கோவை - XII : 16 | | |
| iii. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 10 | | |
| iv. | முகாமைத்துவ சேவை சுற்றறிக்கை இல. 33 | | |
| v. | தாபனக் கோவை - XII : 36 | | |
| vi. | கோவைவேறு சம்பளமற்ற விடுமுறை | | |

இந்தத் திணைக்களத்தில் ……………………………………………… ஆக பதவி வகிக்கும் திரு. ……...........………………………
……………….......................…. என்பவரின் விண்ணப்பத்தை சிபரிசு செய்து அனுப்புகிறேன்

……………………… ……………………………………..
திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்

07-41

---

**சுற்றாடல் அமைச்சு**

## கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின், ஆரம்ப பகுதித் திறன் சேவைப் பிரிவில் மின்சார தொழிநுட்பவியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026

கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின், ஆரம்ப பகுதித் திறன் சேவைப் பிரிவில் உள்ள மின்சார தொழிநுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக, பந்தி 02- இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் தேதியான 2026.08.03 அன்று விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

அறிவிப்பில் காணப்படும் தகுதிகள் உள்ள விண் ணப்பதாரர்களுள் தகுதிகாண் திறனாய்வு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட் சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

1.1 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட இந்த அறிவிப்பின் பந்தி இலக்கம் 05 இன் கீழ் குறிப்பிடப்பட்ட மதிப்பெண்கள் அளிக்கப்படும் நடைமுறைக்கு அமைய திறமை காண் நேர்முக தேர்வு நடத்தப்படும்.

1.2 அறிவிப்பில் காணப்படும் தகுதிகள் உள்ள விண் ணப்பதாரர்களுள் தகுதிகாண் திறனாய்வு நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமையின் வரிசை அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் சேவையில் இணைத்துக் கொள் ளப்படுவர்.

1.3 ஒருவருக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் ஒரே அளவான மொத்த புள்ளிகள் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் நியமிப்பு அதிகார பணிப்பாளர் ஆணையாளர் நாயகமாகிய எனது முடிவே இறுதியானதாக இருக்கும்.

1.4 இந்த பதவிக்கான நியமனம் நடைமுறைப் படுத்தப்படும் திகதி நியமிப்பு அதிகாரியாகிய கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள்

முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நிர்ணயிக்கப்படும்.

2. **தகுதிகள்:**

2.1 **கல்வித் தகுதிகள்:**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர தேர்வில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன், 06 பாடங்களில், இரண்டு முறைக்கு மேற்படாத அமர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2.2 **தொழில்முறைத் தகுதிகள் :**

ஒவ்வொரு பதவிக் கடமைகளுக்கமைவாக மின்சார தொழிநுட்பவியலாளர் பதவிக்கு, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப / தொழிற் பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தரம் 2-க்குக் குறையாத தேசிய தொழிற்கல்வித் தகுதிகளில் (N.V.Q.) தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்

2.3 **அனுபவம்:**

தொடர்புடைய துறையில் உள்ள அனுபவம் ஒரு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

2.4 **உடல் தகுதிகள் :**

சிறந்த குணநலன்களையும் நல்ல உடல் நலத்தையும் கொண்டிருக்க வேண்டும். மேலும், பதவியின் கடமைகளைச் செய்வதற்குப் போதுமான உடல் தகுதியுடன் இருக்க வேண்டும். தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்ற விருப்பமுள்ளவராகவும் இருக்க வேண்டும்.

2.5 **வயது**:

2.5.1 குறைந்தபட்ச வயது: 18 வயதுக்குக் குறையாமல்

2.5.2 அதிகபட்ச வயது: 45 வயதுக்கு மேற்படாமல்

2.6 **ஏனையவை:**

2.6.1 இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

2.6.2 விண்ணப்பதாரர்கள் சிறந்த குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.

2.6.3 இப்பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான 2.1 முதல் 2.5 வரையிலான தகுதிகள், விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பு/அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. **பணி நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள்:**

3.1 இப்பதவி நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடியது. ஓய்வூதியம் தொடர்பான எதிர்காலத்தில் அரசாங் கத்தால் மேற்கொள்ளப்படும் எந்த கொள்கை தீர்மானத்திற்கும் உட்பட்டது.

3.2 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

3.3 தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தீவிற் குள் குறிப்பிடப்படும் எவ்விடத்திலும் பணியாற்ற தயாராக இருக்க வேண்டும்.

3.4 மொழித் தேர்ச்சி:

3.4.1 அரசாங்க மொழித் தேர்ச்சி:

| மொழி | பெறப்பட வேண்டிய தேர்ச்சி |
|---|---|
| 01. அரசாங்க மொழி | அரசாங்க மொழியைத் தவிர வேறு மொழி வழியில் பணியில் சேர்ந்த ஊழியர்கள், தகுதிகாண் காலத்தில் அரசாங்க மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும். |
| 02. மற்றைய அரசாங்க கரும மொழி | பொது நிர்வாக சுற் றறிக்கை இல. 01/2014 மற்றும் அதன் துணை சுற்றறிக்கைகளின்படி, உரிய அளவிலான தேர்ச்சியைப் பெற் றிருக்க வேண்டும். |

4. **மாதச் சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் PL-2-2025 சம்பளப் பிரிவின்படி, இந்தப் பதவிக்கு மாதச் சம்பள விகிதமாக ரூபா 41,800.00 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 -12 x 630 - ரூபா 65,560.00 வழங்கப்படும். (25.03.2025 தேதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 10⁄2025-இன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சம்பளம் வழங்கப் படும்.)

5. திறனாய்வு மதிப்பீட்டு நேர்காணலுக்குப் பின்வரும் மதிப்பெண் முறை பயன்படுத்தப்படும்.

5.1 திறனாய்வுத் தேர்வு நேர்காணலுக்குப் பின்வரும் மதிப்பெண் முறை பயன்படுத்தப்படும்.

| | *விடயம்* | | *அதிகபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகுதிகள்:**<br><br>மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்ற பொதுத் தராதர கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) | 15 | 15 |
| | இரண்டு பாடங்களில் தேர்ச்சி பெற்ற பொதுத் தராதர கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) | 10 | |
| | ஒரு பாடத்தில் தேர்ச்சி பெற்ற பொதுத் தராதர கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) | 05 | |
| 02 | **மேலதிக தொழில்முறைத் தகுதிகள் :**<br><br>மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு பொரு ந்தும் வகையில் உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறை யில் ஒரு வருடத்திற்கும் குறையாத டிப்ளோமா படிப்பு | 35 | 35 |
| | மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு பொரு ந்தும் வகையில் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத் தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் 06 மாதங்களுக்கு குறையாத டிப்ளோமா படிப்பு | 25 | |
| | மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்கு பொரு ந்தும் வகையில் உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறு வனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் 03 மாதங்களுக்கும் குறையாத சான்றிதழ் படிப்புக்கு | 15 | |
| 03 | **மேலதிக அனுபவம்:**<br><br>தொடர்புடைய துறை சார்ந்த ஒரு நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தின் அடிப்படையில் மதிப் பெண்கள் வழங்கப்படும்.<br><br>- ஆண்டுக்கு 05 மதிப்பெண்கள் வீதம் கூடியபட்சம் 45 மதிப்பெண்கள்<br><br>- 06 மாதங்களுக்கு மேல் மற்றும் வருடத்திற்கு குறைவெனில் 02 மதிப்பெண்கள்<br><br>(மேலதிக அனுபவமானது, சம்பந்தப்பட்ட நிறுவனத் திடமிருந்து பெறப்பட்ட சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதில் முத்திரை இருப்பது கட்டாயமாகும்.) | | 45 |
| 06 | நேர்காணல் குழுவின் விருப்பப்படி தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொடர்புத் திறன்கள்: | | 05 |
| | மொத்தம் | | 100 |

மேற்கண்ட தகுதிகள் எழுத்துபூர்வமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

6. **விண்ணப்பதாரர்களின் அடையாளம்:**

6.1 அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே திறனாய்வு நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

6.2 அனைத்துச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மற்றும் முறையாகச் சான்றளிக்கப்பட்ட நகல்கள் நேர்காணலின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6.3 விண்ணப்பதாரர்கள் நேர்காணலின்போது பின்வரும் ஆளடையாள ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

6.3.1 ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

6.3.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

6.3.3 செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

7. **விண்ணப்பிக்கும் முறை :**

7.1 விண்ணப்பப்படிவமானது, இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி இருக்க வேண்டும். மேலும், அது A4 அளவு தாளில், முதல் பக்கத்தில் 01 முதல் 04 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 05 முதல் 08 வரையிலும், மூன்றாம் பக்கத்தில் 09 முதல் 13 வரையிலும் விண்ணப்பத் தலைப்பு எண்களுடன் தயாரிக்கப்பட்டு, உங்கள் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்களும், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் ஒரு நகலை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்)

7.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், 2026.08.03 ஆந் திகதிக்கு முன்னதாகவோ அல்லது அன்றோ, “பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம், அஞ்சல் பெட்டி 556, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10” என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது மேல் மூலையில், “கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ துறையில் மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026" என்ற வார்த்தைகள் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பின்பு பெறப்படும் எந்த விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படாது.

7.3 விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம், ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையர்/வழக்கறிஞர்/பிரசித்த நொத்தாரிசு, ஆயுதப் படைகளின் ஆணையிடப்பட்ட அதிகாரி அல்லது அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியில் இருந்து மாதம் ரூபா 82,150.00 ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அதிகாரி ஒருவரினால் சான்றளிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல் :**

ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தில் வழங்கிய ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன்னர் தவறானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பிறகு அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், அவர் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டு அரசாங்கப் பணியிலிருந்து நீக்கப்படுவார்.

- இந்த அறிவிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு இருப்பின், சிங்கள உரையே செல்லுபடியாகும்.

பேராசிரியர் பி. பி. டர்னி பிரதீப் குமார,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர
வள முகாமைத்துவ திணைக்களம்.

2026.06.24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுற்றாடல் அமைச்சு**

**கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் மின்சார தொழில்நுட்பவியலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு**

விண்ணப்பிக்கும் மொழி

சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு./திருமதி/செல்வி): தமிழில்

..........................................................................................................................................

..........................................................................................................................................

ஆங்கிலத்தில்

..........................................................................................................................................

..........................................................................................................................................

1.1. முதலெழுத்தில் காட்டப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)

தமிழில் :

………………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………

ஆங்கிலத்தில் :

………………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………

2. தேசிய ஆளடையாள அட்டை எண் :…………………………………………………………………………………

3. பிறந்த திகதி :

ஆண்டு:…………………………மாதம்:……………………….திகதி:………………..

4. பால்நிலை : பெண் - 1 ஆண் - 0 ☐

5. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :
………………………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………

6. தொலைபேசி எண் : நிலவழித் தொலைபேசி :…………………… கைப்பேசி………………

7. கல்வித் தகுதிகள்:

7.1 க.பொத (சா.த.) தேர்வு விவரங்கள் :

1. தேர்வு நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம்
2. தேர்வு எண்
3. தேர்ச்சி பெற்ற ஆண்டு :

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

7.2 க.பொ.த. (உ./தர) தேர்வு விவரங்கள் :

4. தேர்வு நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் :……………………………………………
5. தேர்வு எண் :……………………………
6. தேர்ச்சி பெற்ற ஆண்டு :…………………..

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

8. தொழில்முறைத் தகுதி

.................................................................................................................................................................
.................................................................................................................................................................
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

9. பதவிக்குத் தொடர்புடைய அனுபவம்

.................................................................................................................................................................
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

10. ஏதேனும் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம்/இல்லை

10.1 ஆம் எனில், விபரங்களை வழங்கவும் :

.................................................................................................................................................................
.................................................................................................................................................................

11. உறவினர்கள் அல்லாத, விசாரிக்கக்கூடிய நபர்கள் :

1. பெயர் :
பதவி :
முகவரி :
தொலைபேசி எண் :

2. பெயர் :
பதவி :
முகவரி :
தொலைபேசி எண் :

12. விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள், எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன்.

(ஆ) நான் அளித்த கூற்று பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், நான் ஆட்சேர்ப்புக்குத் தகுதியிழப்பேன் என்றும், நியமனத்திற்குப் பிறகு அது நிரூபிக்கப்பட்டால், பணியிலிருந்து நீக்கப்படுவதற்குப் பொறுப்பாவேன் என்றும் இதன்மூலம் நான் உறுதியளிக்கிறேன்.

(இ) இதில் கொடுக்கப்பட்டுள்ள எந்தத் தகவலையும் நான் மாற்ற மாட்டேன்.

………………………………..
விண்ணப்பதாரரின் கையொப்பம்

……………………
திகதி

13. விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்கான சான்றளிப்பு :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ………………………………………………………..என்னும் நபர் தனிப்பட்ட முறையில் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும், அவர் …………………….. ஆம் திகதி என் முன்னால் மேலே உள்ள பந்தி 12 இன் கீழ் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் சான்றுபடுத்துகிறேன்.

……………………………..
சான்றளிப்பவரின் கையொப்பம்

திகதி :
சான்றளிப்பவரின் பெயர் :
பதவி :
முகவரி :
(அலுவலக முத்திரையால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

**சுற்றாடல் அமைச்சு**

## கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின், ஆரம்ப பகுதித் திறன் சேவைப் பிரிவில் அளவையியலாளர் உதவியிலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026

கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின், ஆரம்ப பகுதித் திறன் சேவைப் பிரிவில் உள்ள 04 அளவையியலாளர் உதவியாளர் பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக, பந்தி 02-இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிடமிருந்து, விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் திகதியான 2026.08.03 அன்று விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை :**

அறிவிப்பில் காணப்படும் தகுதிகள் உள்ள விண்ணப்ப தாரர்களுள் தகுதிகாண் திறனாய்வு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

1.1 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட இந்த அறிவிப்பின் பந்தி இலக்கம் 05 இன் கீழ் குறிப்பிடப்பட்ட மதிப்பெண்கள் அளிக்கப்படும் நடைமுறைக்கு அமைய திறமை காண் நேர்முக தேர்வு நடத்தப்படும்.

1.2 அறிவிப்பில் காணப்படும் தகுதிகள் உள்ள விண்ணப்பதாரர்களுள் தகுதிகாண் திறனாய்வு நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமையின் வரிசை அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

1.3 ஒருவருக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் ஒரே அளவான மொத்தப் புள்ளிகள் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் நியமிப்பு அதிகார பணிப்பாளர் ஆணையாளர் நாயகமாகிய எனது முடிவே இறுதியானதாக இருக்கும்.

1.4 இந்த பதவிக்கான நியமனம் நடைமுறைப்படுத் தப்படும் திகதி கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நிர்ணயிக்கப் படும்.

2. **தகுதிகள்**

2.1 **கல்வித் தகுதிகள் :**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தர தேர்வில் குறைந்தபட்சம் இரண்டு திறமைச் சித்திகளுடன், 06 பாடங்களில், இரண்டு முறைக்கு மேற்படாத அமர்வுகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2.2 **தொழில்முறைத் தகுதிகள் :**

அளவையியலாளர் உதவியாளர் பதவிக்கு, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தொழில்நுட்ப/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட, தரம் 2 இக்குக் குறையாத தேசிய தொழிற்கல்வித் தகுதிகளில் (N.V.Q.) தேர்ச்சிச் சான்றிதழ் பெற் றிருத்தல் வேண்டும்

2.3 **அனுபவம் :**

தொடர்புடைய துறையில் உள்ள அனுபவம் ஒரு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

2.4 **உடல் தகுதிகள் :**

சிறந்த குணநலன்களையும் நல்ல உடல் நலத்தையும் கொண்டிருக்க வேண்டும். மேலும், பதவியின் கடமைகளைச் செய்வதற்குப் போதுமான உடல் தகுதியுடன் இருக்க வேண்டும். தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்ற விருப்பமுள்ளவராகவும் இருக்க வேண்டும்.

2.5 **வயது:**

2.5.1 குறைந்தபட்ச வயது: 18 வயதுக்குக் குறையாமல்
2.5.2 அதிகபட்ச வயது: 45 வயதுக்கு மேற்படாமல்

2.6 **ஏனையவை :**

2.6.1 இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

2.6.2 விண்ணப்பதாரர்கள் சிறந்த குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.

2.6.3 இப்பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான 2.1 முதல் 2.5 வரையிலான தகுதிகள், விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பு/அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. **பணி நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் :**

3.1 இப்பதவி நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடியது. ஓய்வூதியம் தொடர்பான எதிர்காலத்தில் அரசாங் கத்தால் மேற்கொள்ளப்படும் எந்த கொள்கைத் தீர்மானத்திற்கும் உட்பட்டது.

3.2 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

3.3 தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தீவிற் குள் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பகுதியில் பணியாற்ற வேண்டும்.

3.4 மொழித் தேர்ச்சி:

3.4.1 அரசாங்க மொழித் தேர்ச்சி:

| *மொழி* | *பெறப்பட வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| 01. அரசாங்க மொழி | அரசாங்க மொழியைத் தவிர வேறு மொழி வழியில் பணியில் சேர்ந்த ஊழியர்கள், தகுதிகாண் காலத்தில் அரசாங்க மொழித் தேர்ச்சியைப் பெற வேண்டும். |
| 02. மற்றைய அரச கரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01⁄2014 மற்றும் அதன் துணை சுற்றறிக்கைகளின்படி, உரிய அளவிலான தேர்ச்சியைப் பெற்றிருக்க வேண்டும். |

4. **மாதச் சம்பள அளவுத்திட்டம் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை இல. : 10/2025 இன் PL-2-2025 சம்பளப் பிரிவின்படி, இந்தப் பதவிக்கு மாதச் சம்பள விகிதமாக ரூபா 41800.00 -10 x 490 -10 x 540 -10 x 590 -12 x 630 - ரூபா 65,560.00 வழங்கப்படும். (25.03.2025 திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 10⁄2025 இன் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சம்பளம் வழங்கப்படும்.)

5. **திறனாய்வு மதிப்பீட்டு நேர்காணலுக்குப் பின்வரும் மதிப்பெண் முறை பயன்படுத்தப்படும்.**

5.1 திறனாய்வுத் தேர்வு நேர்காணலுக்குப் பின்வரும் மதிப்பெண் முறை பயன்படுத்தப்படும்.

| | *விடயம்* | | *அதிகபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகுதிகள் :**<br>மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்ற பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) | 15 | 15 |
| | இரண்டு பாடங்களில் தேர்ச்சி பெற்ற பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) | 10 | |
| | ஒரு பாடத்தில் தேர்ச்சி பெற்ற பொதுக் கல்விச் சான்றிதழ் (உயர் தரம்) | 05 | |
| 02 | **மேலதிக தொழில்முறைத் தகுதிகள்:**<br>அளவையியலாளர் உதவியாளர் பதவிக்கு பொருந்தும் வகையில் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் ஒரு வருடத்திற்கும் குறையாத டிப்ளோமா படிப்பு | 35 | 35 |
| | அளவையியலாளர் உதவியாளர் பதவிக்கு பொருந்தும் வகையில் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் 06 மாதங்களுக்கும் குறையாத டிப்ளோமா படிப்பு | 25 | |
| | அளவையியலாளர் உதவியாளர் பதவிக்கு பொருந்தும் வகையில் உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் 03 மாதங்களுக்கும் குறையாத சான்றிதழ் படிப்புக்கு | 15 | |
| 03 | **மேலதிக அனுபவம்:**<br>தொடர்புடைய துறை சார்ந்த ஒரு நிறுவனத்தில் பணியாற்றிய காலத்தின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.<br>- ஆண்டுக்கு 05 மதிப்பெண்கள் வீதம் கூடியபட்சம் 45 மதிப்பெண்கள்<br>- 06 மாதங்களுக்கு மேல் மற்றும் வருடத்திற்கு குறைவெனில் 02 மதிப்பெண்கள்<br>(மேலதிக் அனுபவமானது, சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து பெறப் பட்ட சேவைச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதில் முத்திரை இருப்பது கட்டாயமாகும்.) | | 45 |
| 04 | நேர்காணல் குழுவின் விருப்பப்படி தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொடர்புத் திறன்கள்: | 05 | 05 |
| | **மொத்தம்** | | **100** |

மேற்கண்ட தகுதிகள் எழுத்துபூர்வமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

6. **விண்ணப்பதாரர்களின் அடையாளம்** :

6.1 அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே திறனாய்வு நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

6.2 அனைத்துச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மற்றும் முறையாகச் சான்றளிக்கப்பட்ட நகல்கள் நேர்காணலின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6.3 விண்ணப்பதாரர்கள் நேர்காணலின்போது பின்வரும் ஆளடையாள ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

6.3.1 ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

6.3.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

6.3.3 செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

7. **விண்ணப்பிக்கும் முறை :**

7.1 விண்ணப்பப்படிவமானது, இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி இருக்க வேண்டும். மேலும், அது A4 அளவு தாளில், முதல் பக்கத்தில் 01 முதல் 04 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 05 முதல் 08 வரையிலும், மூன்றாம் பக்கத்தில் 09 முதல் 13 வரையிலும் விண்ணப்பத் தலைப்பு எண்களுடன் தயாரிக்கப்பட்டு, உங்கள் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்களும், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் ஒரு நகலை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்)

7.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், 2026.08.03 தேதிக்கு முன்னதாகவோ அல்லது அன்றோ, "பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம், அஞ்சல் பெட்டி 556, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது மேல் மூலையில், "கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ துறையில் அளவையியலாளர் உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026" என்ற வார்த்தைகள் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். அந்தத் திகதிக்குப் பிறகு பெறப்படும் எந்த விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படாது.

7.3 விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம், ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையர்/வழக்கறிஞர்/பிரசித்த நொத்தாரிசு ஆயுதப் படைகளின் ஆணையிடப்பட்ட அதிகாரி அல்லது அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியில் இருந்து மாதம் ரூபா 82,150.00 ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அதிகாரி ஒருவரினால் சான்றளிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல் :**

ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தில் வழங்கிய ஏதேனும் தகவல் ஆட்சேர்ப்புக்கு முன்னர் தவறானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின்பு அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், அவர் சம்பந்தப்பட்ட சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டு அரசாங்கப் பணியிலிருந்து நீக்கப்படுவார்.

- இந்த அறிவிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு இருப்பின், சிங்கள உரையே செல்லுபடியாகும்.

பேராசிரியர் பி. பி. டர்னி பிரதீப் குமார,
பணிப்பாளர் நாயகம்,
கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள
முகாமைத்துவ திணைக்களம்.

2026.06.24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுற்றாடல் அமைச்சு**

**கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திணைக்களத்தின் அளவையியலாளர் உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு**

விண்ணப்பிக்கும் மொழி

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு. /திருமதி/செல்வி): தமிழில்
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
ஆங்கிலத்தில்
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

1.1. முதலெழுத்தில் காட்டப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)

தமிழில் :

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

ஆங்கிலத்தில் :

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

2. தேசிய ஆளடையாள அட்டை இல. :……………………………………………………………………

3. பிறந்த திகதி :

ஆண்டு:…………………………மாதம்:………………………..திகதி:………………..

4. பால்நிலை : பெண் - 1 / ஆண் - 0 ☐

5. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :

…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

6. தொலைபேசி எண் : நிலவழித் தொலைபேசி :…………………… கைப்பேசி………………

7. கல்வித் தகுதிகள்:

7.1 க.பொத (சா.த.) தேர்வு விவரங்கள் :

1. தேர்வு நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம்
2. தேர்வு எண்
3. தேர்ச்சி பெற்ற ஆண்டு :

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

7.2 க.பொ.த. (உ./தர) தேர்வு விவரங்கள் :

4. தேர்வு நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் :……………………………………………
5. தேர்வு எண் :……………………………
6. தேர்ச்சி பெற்ற ஆண்டு :…………………..

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

8. தொழில்முறைத் தகுதி

..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

9. பதவிக்குத் தொடர்புடைய அனுபவம்

..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

10. ஏதேனும் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம்/இல்லை

10.1 ஆம் எனில், விபரங்களை வழங்கவும் :

..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

11. உறவினர்கள் அல்லாத, விசாரிக்கக்கூடிய நபர்கள் :

1. பெயர் :

பதவி :

முகவரி :

தொலைபேசி எண் :

2. பெயர் :

பதவி :

முகவரி :

தொலைபேசி எண் :

12. விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள், எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன்.

(ஆ) நான் அளித்த கூற்று பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், நான் ஆட்சேர்ப்புக்குத் தகுதியிழப்பேன் என்றும், நியமனத்திற்குப் பிறகு அது நிரூபிக்கப்பட்டால், பணியிலிருந்து நீக்கப்படுவதற்குப் பொறுப்பாவேன் என்றும் இதன்மூலம் நான் உறுதியளிக்கிறேன்.

(இ) இதில் கொடுக்கப்பட்டுள்ள எந்தத் தகவலையும் நான் மாற்ற மாட்டேன்.

………………………………..
விண்ணப்பதாரரின் கையொப்பம்

……………………
திகதி

13. விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்கான சான்றளிப்பு :

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ………………………………………………………என்னும் நபர் தனிப்பட்ட முறையில் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும், அவர் ……………………… ஆம் திகதி என் முன்னால் மேலே உள்ள பந்தி 12 இன் கீழ் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் சான்றுப்படுத்துகிறேன்.

…………………………….
சான்றளிப்பவரின் கையொப்பம்

சான்றளிப்பவரின் பெயர் :
பதவி :
முகவரி :
திகதி :
(அலுவல் முத்திரையால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

07-43

---

## சுற்றாடல் அமைச்சு

### கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் தொடர்பான அதிகாரிகள் சேவையின் தரம் III இன் புவியியல் விஞ்ஞான தகவல் அமைப்பு நிகரலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026

கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் தொடர்பான அதிகாரி சேவைப் பிரிவில் புவியியல் விஞ்ஞான தகவல் அமைப்பு நிரலாளர் பதவி 01 க்கான தேர்வுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதி தினத்திற்கு, அதாவது 2026.08.03 ஆம் திகதிக்கு கீழ்க் காணும் 2 ஆவது பந்தியில் காணப்படும் தகுதிகளை கொண்ட விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **தேர்வு முறை :**

1.1 அறிவிப்பில் காணப்படும் தகுதிகள் உள்ள விண்ணப்பதாரர்களுள் தகுதிகாண் திறனாய்வு நேர்முகப்பரீட்சையில் காட்டும் திறமையின் வரிசை அடிப்படையிலும், வெற்றிடங்களின் எண்ணிக்கை அடிப்படையிலும் சேவையில் இணைத்துக் கொள்ளப்படுவர்.

1. 2 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இந்த அறிவிப்பின் பந்தி இலக்கம் 05 இன் கீழ் குறிப்பிடப்பட்ட மதிப் பெண்கள் அளிக்கப்படும் நடைமுறைக்கு அமைய திறமை காண் நேர்முக தேர்வு நடத்தப்படும்.

1.3 ஒருவருக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகள் ஒரே அளவான மொத்த புள்ளிகள் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் நியமிப்பு அதிகாரியாகிய பணிப் பாளர் ஆணையாளர் நாயகத்தின் முடிவே இறுதி யானதாக இருக்கும்.

1.4 இந்த பதவிக்கான நியமனம் நடைமுறைப்படுத்தப் படும் திகதி கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நிர்ணயிக் கப்படும்.

2. **தகுதிகள் :**

2.1 **கல்வித் தகுதிகள் :**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில்/ நிறுவனமொன்றினால் புவியியல் விஞ்ஞான தகவல் தொகுதியை பிரதான பாடமாக கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல்.

2.2 **தொழிற்சார் தகுதிகள் :**

குறித்த துறையில் தொழிற்சார் தகுதிகள் விசேட தகுதியாக கருதப்படும்.

2.3 **அனுபவம் :**

குறித்த விடயத்தில் பெற்றிருக்கும் அனுபவம் விசேட தகுதியாக கருதப்படும்.

2.4 **உடல் தகுதிகள் :**

ஒவ்வொரு வேட்பாளரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும், எந்தவொரு கடமையையும் ஆற்றவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும் என்பதுடன் தீவின் எந்தப் பகுதியிலும் கடமையாற்ற உடன்பட்டிருக்க வேண்டும்.

2.5 **ஏனையவை :**

2.5.1. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
2.5.2. விண்ணப்பதாரர்கள் சிறந்த குணநலன்களைக் கொண்டிருக்க வேண்டும்.
2.5.3. இப்பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகுதிகள், விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்குள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

2.6 **வயது :**

2.4.1. குறைந்தபட்சம் : 21 வயது

2.4.2. அதிகபட்ச வயது : 35 வயது

3. **பணி நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் :**

3.1 இப்பதவி ஒரு நிரந்தர ஓய்வூதியப் பதவியாகும். ஓய்வூதியம் தொடர்பாக எதிர்காலத்தில் அரசாங் கத்தினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொள்கைத் தீர்மானத்திற்கும் உட்பட்டது.

3.2 03 ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

3.3 தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தீவிற் குள் குறிப்பிடப்பட்ட எந்தவொரு பகுதியிலும் பணி யாற்ற வேண்டும்.

3.4 **மொழித் தேர்ச்சி:**

3.4.1. **அரசு மொழித் தேர்ச்சி:**

ஆங்கில மொழி மூல நியமனம் பெறும் ஓர் அதிகாரி, தனது தகுதிகாண் காலத்தில் சிங்களம் அல்லது தமிழ் ஆகிய மொழிகளில் ஒன்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இந்தத் தேர்ச்சி நிலை என்பது, சிங்களம்/தமிழை ஒரு முக்கிய பாடமாகக் கொண்டு (இரண்டாம் மொழியாகவோ அல்லது விருப்பப் பாடமாகவோ அல்லாமல்) க.பொத (சா.த.) தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் சிறப்புத் திறன் தேர்வில் தேர்ச்சி பெறுதல் ஆகும்.

3.4.2. **வேறு அரசாங்க மொழித் தேர்ச்சி:**

| *தேர்ச்சி பெற வேண்டிய காலம்* | *பெற வேண்டிய தேர்ச்சி நிலை* | *மொழித் தேர்ச்சி* | |
|---|---|---|---|
| | | *சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட மொழி* | *தேர்ச்சி பெற வேண்டிய மொழி* |
| பணியில் சேர்ந்த முதல் மூன்று (3) ஆண்டுகளுக்குள், | அரசாங்க சேவை சுற்றறிக்கை எண் 07/2007 மற்றும் அதன் துணை சுற்றறிக்கைகளின்படி உரிய மொழித் தேர்ச்சி நிலையைப் பெற்றிருக்க வேண்டும். | சிங்களம் | தமிழ் |
| | | தமிழ் | சிங்களம் |
| | | ஆங்கிலம் | உப உட்பிரிவு 3.4.1- இன் கீழ் தேர்ச்சி பெற்ற அரச கரும மொழியைத் தவிர மற்ற அரச கரும மொழி |

4. **மாதச் சம்பள அளவுத் திட்டம் :**

பொது நிர்வாக சுற்றறிக்கை எண் : 10/2025-இல் MN 4 இன் படி, இந்தப் பதவிக்கான சம்பள அளவு ரூபா 53,060.00 - 10 X 800 - 11 X 1,190 - 10 X 1,320 - 5 X 1,350 = ரூ. 94,100.00 ஆகும். (25.03.2025 ஆந் திகதியிட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 10/2025-இன் அட்டவணை II-இல் கூறப்பட்டுள்ளபடி இச் சம்பளம் வழங்கப்படும்.)

5. திறனாய்வுத் தேர்வு நேர்காணலுக்குப் பின்வரும் மதிப்பெண் முறை பயன்படுத்தப்படும். கருத்தியல்கள் :

| | *விடயம்* | | *அதிகபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| 01 | **கல்வி மற்றும் தொழில்சார் தகுதிகள்:**<br>**கல்வி தகுதிகள்:**<br>பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் புவியியல் விஞ்ஞானத் தகவல் அமைப்பை பிரதான பாடமாக கொண்டு பெற்றுக் கொண்ட புவியியல் விஞ்ஞான பட்டம்<br>- முதல் வகுப்பு தேர்ச்சிக்கு | 20 | 45 |
| | - இரண்டாம் வகுப்பு உயர் தேர்ச்சிக்கு | 15 | |
| | - இரண்டாம் வகுப்பு கீழ் மட்ட தேர்ச்சிக்கு | 10 | |
| | **தொழில்முறைத் தகுதிகள் :**<br>பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகம் அல்லது நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் ஒரு வருட காலத்துக்கு குறையாத முதுகலை டிப்ளோமா அல்லது முதுகலை டிப்ளோமா படிப்பொன்றிற்கு (ஒவ்வொரு டிப்ளோமாவிற்கும் தலா 05 மதிப்பெண்கள்)<br>அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் 06 மாதத்துக்கு குறையாத டிப்ளோமா படிப்பு (ஒவ்வொரு டிப்ளோமாவிற்கும் தலா 03 மதிப்பெண்கள்)<br>அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தால் வழங்கப்படும், தொடர்புடைய துறையில் 03 மாத காலத்துக்கு குறையாத சான்றிதழ் படிப்பு பாடநெறி (ஒவ்வொரு பாடநெறிக்கும் தலா 02 மதிப்பெண்கள்) | } 25 | |
| 02 | **குறித்த துறையில் அனுபவம்:**<br>புவியியல் விஞ்ஞான தகவல் அமைப்பு தொடர்பான அனுபவம்-<br>-ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் கூடியபட்சம் 10 புள்ளிகள்<br>-06மாதங்களுக்கு கூடிய மற்றும் ஒரு வருடத்துக்கு குறைவெனின் 02 புள்ளிகள் | | 10 |
| 03 | **கணினி அறிவு:** | 20 | 20 |
| | பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறுவதற்கு தகவல் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய பாடமாகப் படித்திருத்தல். | 10 | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் 01 ஆண்டுக்கு குறையாத கால அளவு கொண்ட தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா படிப்பு அல்லது 1500 மணிநேரப் படிப்பு | 07 | |
| | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் படிப்பு<br>06 மாதங்கள்/720 மணிநேரம்<br>03 மாதங்கள்/360 மணிநேரம் | 05 | |

| | *விடயம்* | | *அதிகபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| 04 | **மொழி அறிவு :** | | 20 |
| | ஆங்கில வழிக் கல்வி மூலம் பெறப்பட்ட முதுகலைப் பட்டம் | 20 | |
| | (தொடர்புடைய அனைத்துத் தேர்வுத் தாள்களுக்கும் ஆங்கிலத்தில் பதிலளிக்கப்பட்டிருக்க வேண்டும்.) | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் ஆங்கில மொழி டிப்ளோமா படிப்புக்கு (01 ஆண்டு அல்லது 1500 மணிநேரம்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் பெற்றுக் கொண்ட ஆங்கில மொழிச் சான்றிதழ் படிப்புக்கு | 07 | |
| | 06 மாதங்கள்/720 மணிநேரம் | 05 | |
| | 03 மாதங்கள்/360 மணிநேரம் | | |
| 06 | நேர்காணல் குழுவின் விருப்பப்படி தலைமைப் பண்பு மற்றும் தொடர்பாடல் திறன்கள்: | | 05 |
| | மொத்தம் | | 100 |

* மேற்கண்ட தகுதிகள் எழுத்துபூர்வமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

6. **விண்ணப்பதாரர்களின் அடையாளம் :**

6.1 அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே திறனாய்வு நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள்.

6.2 அனைத்துச் சான்றிதழ்களின் மூல பிரதிகளும், முறையாகச் சான்றளிக்கப்பட்ட பிரதிகளும் நேர்காணலின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

6.3 விண்ணப்பதாரர்கள் நேர்காணலின் போது பின்வரும் அடையாள ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.

6.3.1. ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை

6.3.2. செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு

6.3.3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்

7. **விண்ணப்பிக்கும் முறை :**

7.1 விண்ணப்பமானது, இந்த அறிவிப்புடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின்படி, A4 அளவு தாளில் தயாரிக்கப்பட வேண்டும். முதல் பக்கத்தில் 01 முதல் 06 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் 07 முதல் 09 வரையிலும், மூன்றாம் பக்கத்தில் 10 முதல் 11 வரையிலும் விண்ணப்பத் தலைப்பு எண்கள் இடப்பட்டு, ஒருவரின் சொந்தக் கையெழுத்தில் தெளிவாகப் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்களும், முழுமையற்ற தகவல்களைக் கொண்ட விண்ணப்பங்களும் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப் படிவத்தின் ஒரு நகலை வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்)

7.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு 2026.08.03 ஆந் திகதிக்கு முன்னரோ அல்லது அன்றோ, “பணிப்பாளர் நாயகம், கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்து திணைக்களம், அஞ்சல் பெட்டி 556, புதிய செயலாளர் அலுவலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10” என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் அடங்கிய உறையின் மேல் இடது மூலையில், “கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் புவியியல் விஞ்ஞான தகவல் அமைப்பு நிகரலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026" என்று எழுதப்பட வேண்டும். அந்தத் திகதிக்குப் பிறகு பெறப்படும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படாது.

7.3 விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம், ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப்பிரமாண ஆணையாளர்/வழக்கறிஞர்/பிரசித்த நொத்தாரிசு ஆயுதப் படைகளின் கட்டளைத் தளபதி அல்லது அரசாங்கத்தில் நிரந்தரப் பதவியில் இருந்து மாதம் ரூ. 82,150.00 ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அதிகாரி ஒருவரினால் சான்றளிக்கப்பட வேண்டும்.

8. **தவறான தகவல்களை வழங்குதல் :**

ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பப் படிவத்தில் வழங்கிய ஏதேனும் தகவல் தவறானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால் அல்லது ஆட்சேர்ப்புக்கு முன்னர் பிழையானது எனக் கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம் இரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பிறகு அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், அவர் உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு உட்பட்டு அரசாங்கப் பணியிலிருந்து நீக்கப்படுவார்.

- இந்த அறிவிப்பின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலப் பதிப்புகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், சிங்களப் பதிப்பே செல்லுபடியாகும்.

பேராசிரியர் பி. பி. டர்னி பிரதீப் குமார,
பணிப்பாளர் நாயகம்,
கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள
முகாமைத்துவ அமைச்சு.

2026.06.24.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**சுற்றாடல் அமைச்சு**

கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்தில் தொடர்பான அதிகாரிகள் சேவையின் தரம் III புவியியல் விஞ்ஞான தகவல் அமைப்பு நிகரலாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2026

1. முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர் : (திரு./திருமதி/செல்வி)
………………………………………………………………………………………………..

தமிழில் :………………………………………………………………………………

ஆங்கிலத்தில் :…………………………………………………………………………….

1.1. முதலெழுத்துக்களுடன் கூடிய பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்)

தமிழில் :………………………………………………………………………………

ஆங்கிலத்தில் :…………………………………………………………………………….

2. தேசிய ஆளடையாள அட்டை எண் - ......................................................................

3. பிறந்த திகதி :

ஆண்டு:………..மாதம்:……… திகதி………

4. பாலினம் : பெண் - 1 ஆண் - 0 ☐

5. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :
……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

6. தொலைபேசி எண் : நிலவழித் தொலைபேசி: ........................ கைபேசி:………………………

7. கல்வித் தகுதிகள் :

7.1 க.பொ.த. (உ.த.) தேர்வு விவரங்கள் :

1. தேர்வு நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் :………………..
2. தேர்வு எண் :…………………
3. தேர்ச்சி பெற்ற ஆண்டுகள் : …………………..

| *பாடம்* | *தரம்* |
|---|---|
| 1 | |
| 2 | |
| 3 | |
| 4 | |

7.2 பதவிக்குத் தொடர்புடைய தகுதிகள் :

| *தொடர்புடைய தகுதிகள்* | *பெற்ற கல்வி நிறுவனங்கள்* | *செல்லுபடியாகும் திகதி* |
|---|---|---|
| | | |

7.3 மேலதிக தகுதிகள் :

8. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகியுள்ளீர்களா? ஆம்/இல்லை

8.1 ஆம் எனில், விவரங்களைக் குறிப்பிடவும் :

……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

9. விசாரிக்கக்கூடிய உறவினர் அல்லாதவர்கள் :

1. பெயர் :
பதவி :
விலாசம் :
தொலைபேசி எண் :

2. பெயர் :
பதவி :
விலாசம் :
தொலைபேசி எண் :

10. விண்ணப்பதாரரின் சான்றிதழ் :

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கிய தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன்.

(ஆ) நான் அளித்த அறிக்கை பொய்யானது எனக் கண்டறியப்பட்டால், நான் பணியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவேன் என்றும், நியமனத்திற்குப் பிறகு அது நிரூபிக்கப்பட்டால், பணியிலிருந்து நீக்கப்படுவதற்குப் பொறுப்பாவார் என்றும் இதன்மூலம் நான் அறிவிக்கிறேன்.

(இ) இதில் கொடுக்கப்பட்டுள்ள எந்தத் தகவலையும் நான் மாற்ற மாட்டேன்.

…………………………….. ……………………………………
திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

11. விண்ணப்பதாரரின் கையொப்பச் சான்றளிப்பு -:
இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ………………………………………………………என்னும் நபர் தனிப்பட்ட முறையில் அடையாளம் காணப்பட்டுள்ளார் என்றும், அவர் ……………………… ஆம் திகதி என் முன்னால் மேலே உள்ள பந்தி 10 இன் கீழ் கையொப்பமிட்டுள்ளார் என்பதையும் சான்றுபடுத்துகிறேன்.

……………………………..
சான்றளிப்பவரின் கையொப்பம்

திகதி :
சான்றளிப்பவரின் பெயர் :
பதவி :
முகவரி :
(அலுவல் முத்திரையால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

07-44

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு

### சட்டமா அதிபர் திணைக்களத்தில் கனிஷ்ட உதவி அரசாங்க சட்டத்தரணி பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2026

சட்டமா அதிபர் திணைக்களத்தில், அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நிதிகளின்படி கனிஷ்ட உதவி அரசாங்க சட்டத்தரணி பதவிகளில் காணப்படும் 09 வெற்றிடங்களுக்கு தகமையான வர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான நேர்முகப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை சட்டமா அதிபர் திணைக்களத்தின் இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், மேலும் விண்ணப்பங்கள் கீழ்க்காணும் திகதியில் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கத்தக்கதாக சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், த.பெ. இலக்கம் 502, கொழும்பு 12 என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கனிஷ்ட உதவி அரசாங்க சட்டத்தரணி பதவிக்கான விண்ணப்பம் – 2026 என தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026.08.03 ஆம் திகதியாகும்.

குறிப்பு: விண்ணப்பம் அல்லது அது தொடர்பான கடிதம் தொலைந்து விட்டதாகவோ அல்லது தபாலில் தாமதமாகி விட்டதாகவோ தொடர்பில் செய்யப்படும் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது. இறுதித் திகதி வரையில் விண் ணப்பங்களினை தாமதமாக அனுப்பி வைப்பதால் ஏற்படக்கூடிய இழப்புகளினை விண்ணப்ப தாரிகளே பொறுப்பேற்றல் வேண்டும். அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்ப தாரிகளின் விண்ணப்பங்கள் மற்றும் முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் என்பனவும் மறுஅறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

1. **ஆட்சேர்ப்பு முறை:**

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி களைக் கொண்ட நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் முதலாவது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் 50 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளுக்கு மத்தியில் வெற்றிடங்களின் எண்ணிக்கையினை விடவும் இரண்டு மடங்கானவர்கள் இறுதி கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். இறுதி கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது தகைமை வரிசையின் அடிப்படையிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் சேவையின் தேவைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். அங்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட (இல. 09 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளி வழங்கல் நடைமுறைகளுக்கு ஏற்ப கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி ஆகியவை அரசாங்க சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும்.

2. **சேவை நிபந்தனைகள் :**

I. இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையது மாகும். நீங்கள் தகைமை வாய்ந்த ஓய்வூதியத் திட்டம் குறித்து எதிர்காலத்தில் அரசாங்க எடுக்கும் கொள்கை முடிவுக்கு கட்டுப்படுதல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு நீங்கள் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அவ்வப்போது அரசாங் கத்தால் பரிந்துரைக்கப்படும் பங்களிப்புக் களையும் செலுத்துதல் வேண்டும்.

II. இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் உத்தி யோகத்தர்கள் மூன்று (03) வருடங்கள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்கள்.

III. 2020.10.16 ஆம் திகதியிடப்பட்ட பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின்படி ஏனைய அரச கரும மொழி(களில்) தேர்ச்சி பெறுதல் வேண்டும்.

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடை முறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள், சட்டமா அதிபர் திணைக் களத்தின் நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர் களுக்கான உத்தியோகத்தர் சேவை வகை யீட்டுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் திணைக்களத்தின் ஏனைய பணிப்புரைகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் என்ப வற்றிற்கு இந்த நியமனம் உட்பட்டதாகும்.

3. **சம்பள அளவுத்திட்டம்:**

இந்தப் பதவியானது AGS 1-2025, ரூபா 82,150.00 - 10 x 2,400 - ரூபா 106,150.00 எனும் சம்பள அளவுத் திட்டத்திட்டத்திற்கு (மாதாந்தம்) உரித்துடையதாகும்.

4. **கல்சார் / தொழில்சார் தகைமைகள்:**

இலங்கையின் உச்ச நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து இருத்தல் வேண்டும் மற்றும் நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட வலிதான நொத்தாரிசு அனுமதிப்பத்திரத்தினை வைத் திருத்தல் வேண்டும். பெற்றுக்கொண்டுள்ள கல்வித் தகைமைகள் மேலதிக தகைமையாக கருதப்படும்.

5. **அனுபவம்:**

குறித்த துறையில் பெற்றுக் கொண்ட அனுபவமானது விசேட தகைமையாக கருதப்படும்.

6. **வயது எல்லை:**

பரீட்சார்த்தி விண்ணப்ப இறுதி திகதியின் போது 22 வயதிற்கு குறையாதவராகவும் 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

7. **உடல் ரீதியான தகைமைகள் :**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையின் எப்பாகத்திலேனும் கடமையாற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான தகைமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

8. **ஏனைய தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும். (20 வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவத்தினைக் கொண்டுள்ள சட்டத்தரணி ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட நற்சான்றிதழ் பத்திரமொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.)

III. இலங்கைச் சட்டங்களின் கீழ் ஏதேனும் குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்டவராக இருத்தல் ஆகாது.

IV. விண்ணப்ப முடிவுத் திகதியான 2026.08.03 ஆம் திகதியன்று இந்தப் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

9. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை :**

I. முதலாவது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது பின்வரும் புள்ளிகளின் அடிப்படையில் அமையும்.

| *தொடர் இலக்கம்* | *புள்ளிகள் வழங்கப்படும் துறைகள்* | *புள்ளிகள்* | *கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01. | **கல்வித் தகைமைகள் :** | | |
| | i. இலங்கை சட்டக்கல்லூரி இறுதியாண்டு பரீட்சையில் முதலாம் வகுப்பு சிறப்பு சித்தி | 08 | 20 |
| | ii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றிக்கை 01/2025 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டப்படிப்பு (LLB) முதலாம் வகுப்பு சித்தி | 07 | |
| | iii. இலங்கை சட்டக்கல்லூரி இறுதியாண்டு பரீட்சையில் இரண்டாம் வகுப்பு சிறப்பு சித்தி | 06 | |
| | iv. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றிக்கை 01/2025 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டப்படிப்பு (LLB) இரண்டாம் வகுப்பு சித்தி | 06 | |
| | v. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றிக்கை 01/2025 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் சட்டப் பட்டப்படிப்பு (LLB) இரண்டாம் வகுப்பு சித்தி | 05 | |
| | vi. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றிக்கை 01/2025 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழ கத்தில் சட்டப் பட்டப்படிப்பு (LLB) | 04 | |
| | vii. இலங்கை சட்டக் கல்லூரியால் வழங்கப்படும் குறித்த துறையில் சட்டம் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா | 03 | |

| தொடர் இலக்கம் | புள்ளிகள் வழங்கப்படும் துறைகள் | புள்ளிகள் | கூடிய புள்ளிகள் |
|---|---|---|---|
| | viii. அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றிக்கை 01/2025 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் குறித்த துறையில் சட்டம் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா<br>ix. அரசாங்காங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றிக்கை 01/2025 இலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க பல்கலைக்கழகத்தில் வழங்கப்படும் சட்டம் சம்பந்தமான பட்டப்பின் படிப்பு<br>அரசாங்க அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் என்பது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு / உயர் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது நிறுவனம் ஆகும்<br><br>(மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து தகைமைகளும் அதிகபட்சம் 20 புள்ளிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது)<br><br>*மேற்குறித்த கல்வித் தகைமைகள் சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படுதல் வேண்டும் | 02<br><br><br>03 | |
| | தொழிற் தகைமைகள்<br>i. சுறுசுறுப்பாகவும் மற்றும் வெற்றிகரமாகவும் செயற்படும் திறன்களைக் கொண்டிருத்தல். (ஒரு வருடத்திற்கு 02 புள்ளிகள் வீதம்)<br>ii. அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்ட நிறுவனத்தில் வழக்கறிஞராக சுறுசுறுப்பாகவும் வெற்றிகரமாகவும் செயற்பட்டு வெளிப்படுத்திய செயல்திறமைகள்.<br><br>(மேற்குறித்த திறன்களுக்கான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.)<br>குறிப்பு: நீதிபதியொருவரிடமிருந்து தொழிற் திறன் சம்பந்தமான சான்றிதழ் மற்றும் 20 ஆண்டுகளுக்கு குறையாத சேவையைப் பூர்த்தி செய்த இரண்டு சட்டத்தரணிகளிடமிருந்து பெறப்பட்ட நற்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்ட நற்சான்றிதழ்கள் ஏற்புடையதாகாது. | <br>10<br><br>10 | 20 |
| 03. | **விசேட திறமைகள்:**<br>i. தொடர்பாடல் திறமை<br>ii. முன்நின்று உரையாற்றும் திறமை<br>iii. சபையின் முன் வெற்றிகரமாக ஆஜராகும் திறமை<br>iv. மொழியினைக் கையாளும் திறமை | <br>05<br>05<br>05<br>05 | 20 |
| 04. | **நேர்முகப் பரீட்சையின்போது வெளிப்படுத்தும் திறமைகள் :**<br>i. ஆளுமை<br>ii. சுயமாக செயற்படும் திறமை<br>iii. தலைமைத்துப் பண்பு<br>iv. சட்டம் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பான அறிவு | <br>05<br>15<br>05<br>15 | 40 |
| | மொத்தம் | | 100 |

II. இறுதி கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது பின்வரும் புள்ளிகளின் அடிப்படையில் அமையும்

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் பிரதானமான துறைகள்* | *அதிகபட்ச புள்ளிகள்* |
|---|---|
| I. வாதிடும் திறமை | 25 |
| II. விடயங்களை முன்வைக்கும் திறமை | 25 |
| III. கேள்விகளுக்கு பதிலளிக்கும் திறன் | 25 |
| IV. அடிப்படை சட்டக் கோட்பாட்டு அறிவு | 25 |
| மொத்தம் | 100 |

10. **பரீட்சார்த்தியினை அடையாளங் காணுதல்:**

அனைத்து விடயங்களையும் முறையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை அனுப்பி வைக்கும் பரீட்சார்த்திகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் முறையாக சான்றுப்படுத்திய பிரதிகள் என்பன நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது, பரீட்சார்த்திகளின் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

i. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

ii. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

**கவனத்திற் கொள்க:**

(அ) விண்ணப்ப அறிவித்தலின் 9-I இல் உப இல. 01 மற்றும் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் தகைமைகளினை உறுதி செய்வதற்காக, சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நேர்முகத் தேர்வின் போது தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

11. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

நீங்கள் அனுப்பிய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விவரங்கள், ஆட்சேர்ப்புக்கு முன்னர் தவறான அல்லது பிழையானதாகக் கண்டறியப்பட்டால், உங்களின் விண்ணப்பம் இரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பின்னர் இதுபோன்ற தவறான அல்லது பிழையான விவரங்கள் ஏதேனும் கண்டறியப்பட்டால், எந்த நேரத்திலும் உரிய நடைமுறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

12. பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது நிரப்பாமல் விடுவதற்கோ அல்லது குறித்த சில எண்ணிக்கையிலான வெற்றிடங்கள நிரப்புதல் அல்லது இந்த சட்டதிட்டங்களில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானமானது அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

13. வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளில் ஏதேனும் முரண்பாடு காணப்படுமிடத்து சிங்கள உரையே மேலொங்கி நிற்கும்.

14. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் அல்லது இந்த ஆட்சேர்ப்புத் திட்டத்தினுள் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமிடத்து அது தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குகுழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சட்டமா அதிபர்.

உயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
சட்டமா அதிபர் திணைக்களம்,
கொழும்பு 12,
2026, யூன் 26.

07-80

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE)**

**கல்வியாண்டு 2026 இற்காக உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்**

2025 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முந்தைய ஆண்டுகளில் க.பொ.த. (உ./த.) பரீட்சையை வெற்றிகரமாக முடித்தவர்களிடமிருந்து இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE) நடத்தும் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

**விண்ணப்பிப்பது எவ்வாறு**

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகப் (SLIATE) பாடநெறிகளுக்கு விண்ணப்பம் apply.sliate.ac.lk எனும் இணையத்தளத்தினூடாக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் வேறு எந்த விதமான விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகப் (SLIATE) பாடநெறிகளுக்கு நிகழ்நிலையில் விண்ணப்பிக்கும் போதும் தெரிவுசெய்த பாடநெறிக்கு நிகழ்நிலையில் பதிவுசெய்து கொள்ளும் போதும் விண்ணப்பதாரிகள் அனுமதிக்குரிய வழிகாட்டல்களை வாசித்து விளங்கிக்கொண்டு அதிலுள்ள விதிகளையும் ஒழுங்குமுறைகளையும் பின்பற்ற வேண்டும். அனுமதிக்குரிய வழிகாட்டல்கள் நிகழ்நிலை (ஒன்லைன்) விண்ணப்பப்படிவத்துடன் கிடைக்கின்றது.

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகமானது (SLIATE) பின்வரும் அட்டவணையிலுள்ள இரண்டு வகை உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளையும் நடத்துகின்றது.

| | |
|---|---|
| தொகுதி I :<br><br>இஸெட் மதிப்பெண்களின் (Z-score) அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகக் (SLIATE) கல்விசார் பாடநெறிகள் | கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA), வியாபார நிருவாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBA), வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDBF), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (சிவில்) (HNDE (CIVIL), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (இயந்திரவியல்) (HNDE (MECHANICAL), பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (மின்னியல் மற்றும் இலத்திரனியல்) (HNDE (ELECTRICAL & ELECTRONICS)/ உயர் தேசிய டிப்ளோமா (தொகைக் கணக்கெடுப்பு) (HNDQS), உயர் தேசிய டிப்ளோமா (நிருமாண சேவைகள் பொறியியல்) (HNDBSE), தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) (HNDT(Agri.) உணவுத் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDFT) |
| தொகுதி II :<br><br>வரையறுக்கப்பட்ட புள்ளிவழங்கல் திட்டத்தின் அடிப்படையிலான உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகக் (SLIATE) கல்விசார் பாடநெறிகள் | ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (HND in English), தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDIT), முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM), செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDPM), சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM) |

தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் இஸெட் மதிப்பெண்களின் (Z-score) அடிப்படையில் மற்றும் வரையறுக்கப்பட்ட புள்ளிவழங்கல் திட்டத்தின் அடிப்படையில் தமது முன்னுரிமையின் கீழ் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATIs) மற்றும் உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகளில் 10 வரையிலான வாய்ப்புக்களைத் தெரிவு செய்யலாம்.

தயவுசெய்து உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகளின் நுழைவுத் தகுதிகளுக்கு பிரிவு “அ” வையும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATIs) பற்றிய விவரங்களுக்கு பிரிவு “ஆ” வையும் பார்க்கவும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள், மேற்கண்ட இரண்டு பிரிவுகளிலிருந்து, தங்களுக்கு விருப்பமான ATI-களின் 10 கல்விப் பாடநெறிகளுக்கு (ATI மற்றும் HND பாடநெறிகளின் கலவை) 1,000.00 கட்டணம் செலுத்துவதன் மூலம் விண்ணப்பிக்கலாம்.

உங்கள் வங்கிச் செயலியில் ஏற்கனவே வசதி செய்யப்பட்டுள்ள "Govpay" மூலம் பணம் செலுத்தலாம்.

விண்ணப்பக் கட்டணத்தை "Govpay" மூலம் செலுத்துவது எப்படி :-

1. உங்கள் வங்கிச் செயலிக்குச் செல்லவும்.
2. பட்டியல் கட்டணம் (Bill Payment) என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
3. பட்டியல் கட்டணம் (Bill Payment) என்பதன் கீழ் "Govpay" என்ற வகையைத் தேர்ந்தெடுக்கவும்.
4. நிறுவனத்தின் பெயர் (organization name) என்பதன் கீழ், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (Sri Lanka Institute of Advanced Technological Education) என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
5. சேவை வகை என்பதன் கீழ் விண்ணப்பக் கட்டணம் என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
6. விவரங்களைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்கவும்.

"பணம் செலுத்துதல் வெற்றிகரமாக முடிந்தது" என்பதற்கான பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு/பணப் பற்றுச்சீட்டை, SLIATE தலைமை அலுவலகத்தின் கணக்காளருக்கு govpay.accountant@sliate.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

வங்கிப் பணப்பரிவர்த்தனை பற்றுச்சீட்டின் பரிவர்த்தனை குறிப்பு இலக்கத்தை (TRN-Transaction Reference Number) இணையவழி விண்ணப்பத்தில் உள்ளிட வேண்டும்.

கொடுப்பனவுகள் மக்கள் வங்கி, தெஹிவளை அல்லது இலங்கையின் மக்கள் வங்கி வேறு எந்த கிளையிலாவது SLIATE கணக்கு 019100203397613 இற்கு 2026, ஓகத்து 03 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் வரவு வைக்கப்பட வேண்டும்.

ஒன்லைன் விண்ணப்பம் உறுதிசெய்யப்பட்ட பிறகு உருவாக்கப்பட்ட விண்ணபத்தின் வன்பிரதியைப் பெற்றுக் கொள்ளவும். உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் (ATI) பதிவினை மேற்கொள்ளும் போது மேற்படி விண்ணபத்தின் கையொப்பமிடப்பட்ட பிரதியுடன், பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒன்லைன் விண்ணப்பம் உறுதிசெய்யப்பட்ட பிறகு, கணினியால் உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் பெற்றுக்கொள்ளவும். மேற்கண்ட விண்ணப் பத்தின் கையொப்பமிடப்பட்ட பிரதி மற்றும் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றை, நீங்கள் விரும்பும் 1 ஆம் ATI-க்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் செயலாக்கப்படும்போதும் அதற்குப் பின்னரும் அதன் நிலை குறித்த தகவல், விண்ணப்ப தாரருக்கு அவர் வழங்கிய மின்னஞ்சல் முகவரி, கைபேசி இலக்கம் அல்லது தபால் மூலம் தெரிவிக்கப்படும்.

2026, ஓகத்து 03 அன்றைய விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**பாடநெறிகளை நடத்தும் முறை**

- முழு நேர பாடநெறிகள்
- பகுதி நேர பாடநெறிகள் (வார இறுதி நாட்களில்)

**போதனா மொழி** : ஆங்கிலம்

சம்பந்தப்பட்ட துறைகளில் பணிபுரிபவர்களுக்கு பகுதி நேர பாடநெறிகள் நடாத்தப்படுகின்றன.

**பாடநெறிக் கட்டணம் :**

முழு நேர பாடநெறிக் கட்டணம் - இலவசம்

ஒரு அரையாண்டிற்கு பகுதி நேர பாடநெறிக் கட்டணம் பின்வருமாறு :

| | |
|---|---|
| கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – HNDA | ரூபா 17,000.00 |
| ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா –(HND in English) | ரூபா 17,000.00 |
| தகவல் தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDIT) | ரூபா. 30,000.00 |
| பகுதி நேர பாடநெறிக்கான மீளச்செலுத்தப்படும் வைப்பு | ரூபா 10,000.00 |

**பதிவு :**

கல்வி மற்றும் பிற தேவையான ஆவணங்களின் அசல் மற்றும் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை பதிவு செய்யும் போது சமர்ப்பிக்க வேண்டும்.

**விடுதி வசதிகள் :**

வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையிலான முழுநேர மாணவர்களுக்கு பின்வரும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் (ATIs) மட்டுமே கோரிக்கையின் பேரில் விடுதி வசதிகள் வழங்கப்படும்.

தெஹிவளை மற்றும் கம்பஹா உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATI) - மாணவிகளுக்கு மட்டும்

அம்பாறை மற்றும் கொழும்பு உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATI) - ஆண் மற்றும் பெண் மாணவர்கள்

**உயர் தேசிய டிப்ளோமா (HND) நிகழ்ச்சிகளில் அனுமதிக்கான மாணவர் தெரிவு முறை – 2026 ஆம் கல்வியாண்டு**

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் (இஉதொகநி) நடாத்தப்படும் 2026 ஆம் கல்வியாண்டிற்கான உயர் தேசிய டிப்ளோமா (HND) நிகழ்ச்சிகளில் மாணவர் அனுமதியானது, SLIATE-இன் தொடர்புடைய அதிகாரிகளால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் தெரிவு அளவுகோல்கள் மற்றும் முறைக்கு இணங்க மேற்கொள்ளப்படும்.

**தெரிவு அளவுகோல்கள் :**

விண்ணப்பதாரர்களின் தெரிவு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள வரிசைப்படி பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் அமையும்:

அ) விண்ணப்பதாரர்கள், தமது நிரந்தர வசிப்பிடத்திற்கு மிக அருகிலுள்ள உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் (ATIs) வழங்கும், தமக்கு விருப்பமான பாடப்பிரிவுகளுக்கு விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். இந்த நடவடிக்கை, மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ஏற்படும் தங்குமிடம், போக்குவரத்து மற்றும் வாழ்க்கைச் செலவுகளைக் குறைப்பதன் மூலமும், மாணவர்களின் நல்வாழ்வையும் தேர்ந்தெடுக்கப்பட்ட படிப்புத் திட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதையும் ஆதரிக்கும் வகையில் அவர்களின் பாதுகாப்பை அதிகரிப்பதன் மூலமும், உயர்கல்விக்கான அணுகலை எளிதாக்க ஊக்குவிக்கப்படுகிறது.

ஆ) கல்வித் தகுதியானது, தொடர்புடைய க.பொ.த (சா./த.) பரீட்சையில் இஸட்-மதிப்பெண் அல்லது அந்தந்த உயர் தேசிய டிப்ளோமாப் பாடநெறிக்குப் பொருந்தக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட தெரிவு முறையின்படி கணக்கிடப்பட்ட மதிப்பெண்களைக் கொண்டு தீர்மானிக்கப்படும்.

இ) விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியில் இருபத்து மூன்று (23) வயதுக்குக் குறைவான விண்ணப்ப தாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பிரிவு “அ"**

**உயர் தேசிய டிப்ளோமாக்களுக்கான நுழைவுத் தகுதிகள்**

1. **கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA) :**

1.1 **முழு நேரம் - 4 ஆண்டுகள் :**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் வணிகப் பிரிவில் கணக்கீட்டை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த (சா./த.) பரீட்சையில ஆங்கிலத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

1.2 **பகுதி நேரம் - 4 ஆண்டுகள் :**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருக்க வேண்டும்:

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் வணிகப் பிரிவில் கணக்கீட்டை ஒரு பாடமாகக் கொண்டு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடத்தில் சாதாரண சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்க நிறுவனம்/பொது நிறுவனம்/அங்கீ கரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் பணி யாளராக அல்லது சுயதொழில் செய்பவராக (தொழில் முனைவோர்) இருக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது சட்டரீதியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அல்லது

(ii) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி

மற்றும்

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி (DTET) திணைக்களத்தினால் நடாத்தப்படும் கீழே கொடுக்கப்பட்டுள்ள சான்றிதழ் பாடநெறிகளில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல்

அ. கணக்கீட்டுத் துறையில் உயர் தேசிய டிப்ளோமா
ஆ. கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்களுக் கான தேசிய சான்றிதழ்
இ. வணிகக் கல்வியில் தேசிய சான்றிதழ்
ஈ. கணக்கீட்டில் தேசிய சான்றிதழ்

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்களில் சாதாரண சித்தி

மற்றும்

விண்ணப்பதாரர் சம்பந்தப்பட்ட துறையில் அரசாங்க நிறுவனம்/பொது நிறுவனம்/அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் பணியாளராக அல்லது சுய தொழில் செய்பவராக (தொழில்முனைவோர்) இருக்க வேண்டும். நேர்முகப் பரீட்சையின் போது

சட்டரீதியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

குறிப்பு 1:

வணிகப் பிரிவில் கல்விகற்ற கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா பகுதி நேர விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளில் ஏதேனும் ஒன்றை அல்லது அதிகமானவற்றைப் பெற்றிருந்தால், அவர்களுக்கு 1 ஆம் ஆண்டிலிருந்து விலக்களிக்கப்படும். மேலும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் (ATI) கிடைப்பனவுத் திறனுடன் பிற நுழைவுத் தேவைகளைப் பூர்த்தி செய்திருந்தால் இரண்டாம் ஆண்டுக்குப் பதிவு செய்யப்படுவார்கள்.

(i) இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் (SLIATE) நடாத்தப்படும் வியாபார நிர்வாகம் / வியாபார நிதி மற்றும் வியாபாரக் கல்வியில் தேசிய டிப்ளோமா உயர் தேசிய டிப்ளோமாவினைப் பூர்த்தி செய்திருத்தல்.

(ii) முகாமைத்துவத் துறையில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

(iii) இலங்கையின் பட்டயக் கணக்காளர்களால் நடாத்தப்படும் வணிக மட்டம் I மற்றும் II (அல்லது நிர்வாக நிலை அல்லது CAB I மற்றும் CAB II அல்லது அடிப்படை (Foundation) மற்றும் இடைநிலை (Intermediate) மட்டம் அல்லது உரிமம் (Licentiate) I மற்றும் II) பூர்த்தி செய்திருத்தல்.

(iv) பட்டய முகாமைத்துவக் கணக்காளர்களின் (CIMA - UK) பகுதி I மற்றும் பகுதி II இனைப் பூர்த்தி செய்திருத்தல்.

(v) பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கத்தின் (ACCA-UK) பகுதி I மற்றும் பகுதி II பூர்த்தி செய்திருத்தல்.

(vi) கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கத்தின் (AAT) பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

(vii) சான்றளிக்கப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனம் (CMA-Sri Lanka) நடாத்தும் மட்டம் I மற்றும் II பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

குறிப்பு 2:

பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 46/90 இன் படி, ஆட்சேர்ப்பு நோக்கங்களுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட பல்கலைக்கழகமொன்றினால் வழங்கப்படும் கணக்கீடு பற்றிய உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா, பொது வணிகமாணி (சாதாரண தேர்ச்சி) பட்டத்திற்கு மாற்றுத் தகுதியாக கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. வியாபார நிர்வாகம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா - (HNDBA) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

3. வியாபார நிதி பற்றிய உயர் தேசிய டிப்ளோமா - (HNDBF) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

க.பொ.த. (உ./த.) பரீட்சையில் வணிகப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

4. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE – சிவில்) முழுநேரம் – 3 ½ ஆண்டுகள்

5. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - (மின்னியல் மற்றும் இலத்திரனியல்): முழுநேரம்-3½ ஆண்டுகள்

6. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE - இயந்திரவியல்): முழுநேரம் – 3 ½ ஆண்டுகள்

7. தொகைக் கணக்கெடுப்பு உயர் தேசிய டிப்ளோமா (HNDQS) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

8. நிருமாண சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDBSE): முழுநேரம் - 3 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

க.பொ.த. (உ./த.) பரீட்சையில் பரீட்சை பௌதீக விஞ்ஞான பிரிவில் (இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் இணைந்த கணிதம்) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கில மற்றும் கணித பாடங்களில் சாதாரண சித்தியடைந்திருத்தல்

9. **ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா (HND in English) :**

9.1 **முழுநேரம் - 2 ½ ஆண்டுகள் :**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் எந்தவொரு துறையிலும் ஒரே அமர்வில் (பொது ஆங்கிலம் பிரதான மூன்று பாடங்களில் ஒன்றாகக் கருதப் படாது)

மற்றும்

(ii) க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியும் கணிதத்தில் சாதாரண சித்தியும் அடைந்திருத்தல்

அல்லது

க.பொ.த. (சா./த.) ஆங்கில இலக்கியப் பாடத்திலும் கணித பாடத்திலும் சாதாரண சித்தியடைந்திருத்தல்

**9.2 பகுதி நேர - 2 ½ ஆண்டுகள் :**

9.1 இல் உள்ள மேற்கூறிய தகைமைகளுடன், விண்ணப்பதாரர் அரசாங்கத் துறை / பொது நிறுவனம்/ அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுய தொழில் (தொழில்முனைவோர்) பணியில் ஈடு படுபவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

**10. உணவுத் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDFT) முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானம் அல்லது பௌதிக விஞ்ஞானப் பாடப் பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

க.பொ.த. (சா./த.) ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தியடைந்திருத்தல்.

**11. தகவல் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளமோ (HNDIT)**

**11.1 முழு நேரம் - 2 ½ ஆண்டுகள்**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

மற்றும்

க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

**11.2 பகுதி நேரம் - 2 ½ ஆண்டுகள்**

11.1 இல் உள்ள தகுதிகளுக்கு கூடுதலாக, விண்ணப்பதாரர் அரசாங்க நிறுவனம் / பொது நிறுவனம் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் அல்லது சுயதொழில் (தொழில்முனைவோர்) ஆகியவற்றில் தொடர்புடைய துறையில் பணியமர்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். நேர்காணலின் போது சட்டரீதியான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

12. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM) முழுநேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண் டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

மற்றும்

க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக் களத்தால் நடாத்தப்படும் கணக்கியல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தேசியச் சான்றிதழ் அல்லது வணிகக் கல்விக்கான தேசியச் சான்றிதழ் (பொது நிர்வாகம் / சந்தைப்படுத்தல்)

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

13. செயற்றிட்ட முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDPM)

முழுநேரம் - 2 ½ ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண் டிருக்க வேண்டும்:

க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

மற்றும்

க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

14. தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) (HNDT(Agri.)

முழுநேரம் - 3 ஆண்டுகள்

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஒரே அமர்வில் சித்தி (உயிரியல் மற்றும் இரசாயனவியல், பௌதிகவியல் அல்லது விவசாயம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக)

மற்றும்

க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

அல்லது

(ii) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் உயிரியல் முறை மைத் தொழில்நுட்பப் பிரிவில் உயிரியல் முறை

மைத் தொழில்நுட்பம் தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் சித்தி

மற்றும்

க.பொ.த. (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி

15. **சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM) முழுநேரம் - 3 ஆண்டுகள்**

விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்:

(i) க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் ஒரே அமர்வில் சித்தி

மற்றும்

க.பொ.த (சா./த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்திற்கான சாதாரண சித்தி

**பிரிவு "ஆ"**

**உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களின் பெயர்கள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிகள் [ (முழு நேரம் (முநே) மற்றும் பகுதி நேரம் (பநே) ]**

| | *உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பெயர்* | *முகவரி* | *தொலைபேசி இலக்ககங்கள்* | *வழங்கப்படும் பாடநெறிகள்* |
|---|---|---|---|---|
| 01 | ஹார்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அம்பாறை | பேராசிரியர் ஈவன் ஏ ஹார்டி மாவத்தை, அம்பாறை | 063-2222056<br>063-2223035 | HNDT (Agriculture)(FT), HNDA (FT), HNDM(FT), HNDIT (FT), HNDTHM(FT), HND in English (FT),<br>HNDA (PT), HND in English (PT) HNDIT (PT), |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - அநுராதபுரம் | ஏக்கர் 111, அனுலா மாவத்தை, பண்டுலகம, அநுராதபுரம் | 025-2234417 | HNDIT(FT), HNDA (FT), HND in English (FT),<br>HNDIT(PT) HNDA (PT), HND in English (PT) |
| 03 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - பதுளை | கிரீன்லேன்ட் ட்ரைவ், பதுளை | 055-2230218<br>055-2223818 | HNDIT (FT), HNDA (FT), HNDM(FT), HND in English (FT), HNDTHM(FT), HNDIT (PT), HNDA (PT),HND in English (PT) |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மட்டக்களப்பு | பிரதான வீதி, கோயில்குளம் கிழக்கு, ஆரையம்பதி, மட்டக்களப்பு | 065-2247519<br>065-2247470 | HNDIT (FT), HNDA (FT), HND in English,(FT) HNDA (PT), HND in English (PT), HNDIT(PT). |
| 05 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கொழும்பு | இல. 42, ரொட்ரிகோ பிளேஸ், கொழும்பு 15 | 011-2521152<br>011-2521282 | HNDE (Civil)(FT), HNDE(Mechanical)(FT), HNDE (Electrical & Electronics) (FT) HNDQS(FT), HNDBSE(FT) |
| 06 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தெஹிவளை | இல. 51, வைத்திய வீதி, தெஹிவளை | 011-2738349 | HNDIT (FT), HNDA (FT), HNDM (FT), HNDBA (FT), HND in English (FT), HNDBF(FT), HNDTHM(FT),<br>HNDA (PT), HND in English (PT). |
| 07 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - காலி | சிறிதம்ம மாவத்தை, லபுதுாவ, அக்மீமன, காலி | 091-2246179 | HNDE (Civil)(FT), HNDE(Mechanical)(FT), HNDE (Electrical & Electronics) (FT) HNDQS(FT), HNDIT (FT),<br>HNDT(Agriculture)(FT),<br>HNDA (FT), HNDM(FT), HNDTHM(FT), HNDBA(FT), HND in English (FT),<br>HNDA (PT)), HND in English (PT) |

| | *உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் பெயர்* | *முகவரி* | *தொலைபேசி இலக்ககங்கள்* | *வழங்கப்படும் பாடநெறிகள்* |
|---|---|---|---|---|
| 08 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கம்பஹா | நய்வல, எஸ்ஸால, வெயாங்கொடை | 033-2287519<br>033-2292544 | HNDT (Agriculture) (FT), HNDIT (FT), HNDFT(FT), HNDA (FT), HNDA (PT),), HNDIT (PT), HND in English (PT) |
| 09 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - யாழ்ப்பாணம் | இல. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595<br>021-2229803 | HNDE (Civil)(FT), HNDE (Electrical & Electronics) (FT), HNDA (FT), HND in English(FT), HNDM (FT), HNDIT (FT) HNDIT (PT), HNDA (PT), HND in English (PT) |
| 10 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கண்டி | இல. 16, கெப்படிபொல வீதி, கண்டி | 081-2232097<br>081-2226644 | HNDIT (FT), HNDA (FT), HNDM(FT), HNDBA(FT), HND in English (FT), HNDTHM (FT) HNDA (PT), HND in English (PT), HNDIT (PT). |
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை. | 035-2221297<br>035-2221713 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT), HNDPM (FT), HNDA (PT), HND in English (PT), |
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - குருநாகல் | இல. 22/1, வில்கொடை வீதி, குருநாகல் | 037-2229583<br>037-2224911 | HNDIT(FT),HNDA(FT),HNDM(FT), HND in English (FT), HNDTHM(FT), HNDIT (PT), HNDA (PT), HND in English(PT). |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - மன்னார் | உயிலங்குளம், மன்னார் | 023-2223045<br>076 7966111 | HND in English (FT), HND in English (PT) HNDIT (FT), HNDIT (PT) |
| 14 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - நாவலபிடிய | ஹெயின்/போர்ட் தோட்டம், நாவலபிடிய | 077- 6594248 | HNDTHM (FT), HNDM (FT), HND English (FT), HNDIT (FT), HND in English (PT), HNDBF(FT) |
| 15 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - இரத்தினபுரி | புதிய நகரம், இரத்தினபுரி. | 045-2231492<br>045-2231493 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT) HNDA (PT), HND in English (PT) |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - சம்மாந்துறை | ஏஇஐ ஒழுங்கை, சம்மாந்துறை | 067-2261304 | HNDIT (FT),HNDA (FT), HND in English (FT), HNDIT (PT),HNDA (PT), HND in English (PT) |
| 17 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - தங்காலை | யாவத்தை, நெதோல்பிடிய, தங்காலை | 047-2241845<br>047-2241846 | HNDIT (FT), HNDA (FT), HND in English (FT) |
| 18 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம்-திருகோணமலை | கண்டி வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-2223232 | HNDA (FT), HND in English (FT), HNDIT (FT), HNDA (PT), HND in English (PT), HNDIT (PT), |
| 19 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம் - வவுனியா | ஓப் A 9 வீதி, வேப்பங்குளம், ஓமந்தை வவுனியா. | 024-2052733<br>077-6162010 | HNDA (FT), HND in English(FT) HNDA (PT), HND in English (PT), HNDIT (FT), HNDIT (PT). |

குறிப்பு:

1. விண்ணப்பதாரர் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் தேவையான நுழைவுத் தகுதிகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

2. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (SLIATE) கீழ் இயங்கும் உயர் தொழில்நுட்ப நிறுவனங்களால் (ATIs) நடத்தப்படும் மூன்று ஆண்டுகள் அல்லது அதற்கும் மேற்பட்ட முழுநேர (HND) படிப்பைத் தொடரப் பதிவுசெய்துள்ள மாணவர்கள், 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் (அவ்வப்போது திருத்தப்பட்டவாறான) நிறுவப்பட்ட எந்தவொரு அரசாங்கப் பல்கலைக்கழகம் அல்லது உயர் கல்வி நிறுவனத்திலும் அனுமதி பெறத் தகுதி பெறமாட்டார்கள்.

3. ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட கால உயர் தேசிய டிப்ளோமா (HND) பாடநெறிகள்:

   i. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA)
   ii. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE – சிவில்)
   iii. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE – மின்னியல் மற்றும் இலத்திரனியல்)
   iv. பொறியியல் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDE – எந்திரவியல்)
   v. உயர் தேசிய டிப்ளோமா (நிருமாண சேவைகள் பொறியியல்) (HNDBSE)
   vi. தொழில்நுட்பம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDT- விவசாயம்)
   vii. முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDM)
   viii. சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் பற்றிய உயர் தேசிய டிப்ளோமா – (HNDTHM)

3. 23 வயதிற்குட்பட்ட முழுநேர மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 2025 ஆம் ஆண்டில் க.பொ.த. (உ./த.) பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்களுக்கு முன் னுரிமை வழங்கப்படும்.

4. ஒரு குறிப்பிட்ட ATI இல் பாடநெறியைத்தொடங்க குறைந்தபட்சம் 50 மாணவர்கள் குறிப்பிட்ட பாடநெறியில் பதிவு செய்திருக்க வேண்டும். திட்டத்தைத் தொடங்க போதுமான எண்ணிக் கையில் மாணவர்கள் இல்லை என்றால், அத்தகைய மாணவர்கள் அதே திட்டம் நடத்தப்படும் அருகிலுள்ள ATI க்கு மாற்றப்படுவார்கள். இறுதி முடிவு பணிப்பாளர் நாயகத்தினால் எடுக்கப்படும்.

5. அனைத்து பாடப்பிரிவுகளின் முழுநேர மாணவர்கள் வாரநாட்களிலும் தேவைப்பட்டால் வார இறுதி நாட்களிலும் விரிவுரைகளில் கலந்து கொள்ள வேண்டும்.

6. பகுதி நேர பாடநெறிகள் வார இறுதி நாட்களில் நடத்தப்படும்.

7. முழுநேர மற்றும் பகுதி நேர பாடநெறிகளுக்கான பயிற்றுவிக்கும் முறை பௌதிகரீதியானதாக (வகுப்பில்) இருக்கும். எனினும், தேவையைப் பொறுத்து இருவழிக் கற்பித்தலும் பிரயோகிக் கப்படும்.

8. கணக்கீடு பற்றிய உயர் தேசிய டிப்ளோமா (HNDA) (முழு நேர) திட்டத்தின் முதல் மற்றும் இரண்டாம் வருடங்கள் வார நாட்களில் மட்டுமே நடத்தப்படுகிறது. மூன்றாவது மற்றும் நான்காவது வருடங்கள் வார இறுதி நாட்களில் நடத்தப்படுகின்றன.

9. முழு நேரத் திட்டங்களின் மாணவர்கள் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் உள்ளகப் பயிற்சி பெற வேண்டும்.

10. பகுதி நேர விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட துறையில் பணியமர்த்தப்பட்டிருக்க வேண்டும்.

11. **ஒரு மாணவர் முழுநேர பாடநெறியில் சேர்ந்த வுடன், வேறு எந்த ATI க்கும் மாற்றுவது எந்த சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்படாது.**

12. எந்தவொரு HND பாடத்திற்கும் பதிவு செய்த மாணவர்கள், சம்பந்தப்பட்ட நிறுவனம் வழங்கிய பதிவு முடிவடையும் திகதியில் இருந்து 60 நாட்களுக்கு முன் எந்தவித கட்டணமும் இன்றி தங்கள் பதிவை இரத்துச் செய்ய அனுமதிக் கப்படுவார்கள்.

13. (i) 60 நாட்களுக்குப் பிறகு தங்கள் பதிவை இரத்துச் செய்யும் மாணவர்களிடமிருந்து பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து மாதம் ரூபா 5,000.00 வசூலிக்கப்படும். ஆறு மாத காலம் அல்லது அதற்கு அதிகமான காலத்தில் தமது பதிவை இரத்துச் செய்யும் மாணவர்களிடமிருந்து அதிபட்சம் ரூபா 30,000.00 அறவிடப்படும்.

    (ii) திரும்பப்பெறக்கூடிய ஆரம்ப வைப்புத்தொகை ரூபா 10,000.00 பகுதி நேர மாணவர்களின் பதிவின் போது அறவிடப்படுவதுடன் அது பாடநெறியின் முடிவில் திருப்பி செலுத்தப்படும். மாணவர் பாடநெறியிலிருந்து முன்னதாக வெளி யேறினால், இந்த வைப்புத்தொகை மீளச் செலுத் தப்படமாட்டாது. பகுதி நேர விண்ணப்பதாரர் களில் பதிவின்போது, மொத்தப் பாட நெறிக் கட்டணத்தையும் முழுமையாகச் செலுத்தும் விண்ணப்பதாரர்களுக்கு 10% கழிவு வழங்கப் படும்.

14. முழுநேர மற்றும் பகுதிநேர மாணவர்களுக்கு அரையாண்டு இறுதித் தேர்வுகள் வார நாட்கள் மற்றும் வார இறுதி நாட்களில் நடைபெறும்.

15. க.பொ.த. (உ./த.) மற்றும் க.பொ.த. (சா./த.) பரீட்சைகள் இலங்கையின் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

16. தவறான தகவலை வழங்கிய விண்ணப்பதாரர்கள் நிராகரிக்கப்படுவார்கள்.

17. இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் (SLIATE) பணிப்பாளர் நாயகத்தின் முடிவே உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு 2026 கல்வியாண்டுக்கான மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான இறுதி முடிவாக இருக்கும்.

18. உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் (ATIs) உள்ள ஆசனங்களின் இயலளவின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

19. இணையவழி விண்ணப்ப வசதி இல்லாத மாணவர்கள், சேவைகளைப் பெறுவதற்காக அருகிலுள்ள உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்திற்கு (ATI) நேரில் செல்லலாம்.

20. உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள் (ATIs) மற்றும் உயர் தேசிய டிப்ளோமா (HND) திட்டங்களுக்கு விண்ணப்பிக்கும்போது, விண்ணப்பதாரர்கள் தங்கள் வதிவிடத்திற்கு அருகிலுள்ள உயர் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு விண்ணப்பிப்பது அறிவுடைமையாகும்.

21. மேலதிக விபரங்களுக்கு www.sliate.ac.lk இணையத்தளத்தைப் பார்வையிடவும்

விண்ணப்ப முடிவுத் திகதி 2026, ஓகத்து 03.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE),
53A, வைத்திய வீதி,
தெஹிவளை.

07-98

---

## புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் தொல்பொருட் திணைக்களத்தில் நிறைவேற்றுச் சேவைப்பிரிவின் III ஆம் தர (SL-1-2025) பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை

தொல்பொருட் திணைக்கள நிறைவேற்றுச் சேவைப் பிரிவிற்கு (SL-1-2025) கீழ் காணப்படும் பதவிகளுக்கான தகைமைபெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சம்பந்தப்பட்ட வெற்றிடங்களுக்கு ஒவ்வொரு பதவிக்கும் விதிக்கப்பட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளைப் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2026.08.03 ஆந் திகதிக்கோ அதற்கு முன்னராகவோ தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தற்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

| *தொ. இல.* | *பதவி* | *வெற்றிடங்களின் தொகை* |
|---|---|---|
| i. | உதவிப் பணிப்பாளர் (ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல்) | 01 |
| ii. | உதவிப் பணிப்பாளர் (அகழ்வு) | 01 |
| iii. | உதவிப் பணிப்பாளர் (கல்வெட்டுக்கள் மற்றும் நாணயவியல்) | 01 |
| iv. | உதவிப் பணிப்பாளர் (பிராந்திய) | 05 |
| | **மொத்த தொகை** | **08** |

01. **ஆட்சேர்ப்பு முறை:**

அறிவித்தலில் காணப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகளில் எழுத்துமூலப் பரீட்சை மற்றும் கல்வித் தகைமைகள் மற்றும் உடற்தகுதிகளை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர் புள்ளிகளைப் பெற்றவர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இதன்போது திறந்த போட்டிப் பரீட்சையில்

சித்தியடைந்தோரில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற ஒழுங்கு வரிசையின் அடிப்படை மற்றும் அவர்களது விருப்பம் என்பவற்றைக் கவனத்திற் கொண்டு நிலவும் வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

02. **எழுத்துமூல பரீட்சை:**

இப் பரீட்சைகள் கீழ் வரும் வினாத்தாள்களை உள்ளடக்குவதுடன் திறந்த போட்டிப் பரீட்சையானது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் மூலம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- பொது வினாத்தாள்
- பொது அறிவு வினாத்தாள்
- முகாமைத்துவ சவால்கள்

**எழுத்துமூலப் பரீட்சை :** சிங்கள, தமிழ், ஆங்கில மொழி மூலத்தில் நடத்தப்படும்.

**பரீட்சைத் திகதி**: இப்பரீட்சையானது 2026, செத்தெம்பர் மாதம் கொழும்பில் நடத்தப்படும். இப் பரீட்சையை பிற்போடவோ, இரத்துச் செய்யவோ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியின் கீழ் புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

03. **பொது நேர்முகப் பரீட்சை**:

எழுத்துமூலப் பரீட்சையின் சகல வினாத்தாள்ககளுக்கும் சமூகமளித்த விண்ணப்பதாரிகளுள் ஒவ்வொரு விடயத்திற்கும் ஆகக் குறைந்தது 40% இனைப் பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளுள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் போதுமானது எனத் தீர்மானிக்கப்படும் உயர் மட்டத்திலான முழுப் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமை மற்றும் உடற்தகுதி என்பவற்றை உறுதிப்படுத்துவதற்காக பொதுவான நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதோடு அதற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைக்கான சபையின் மூலம் விண்ணப்பதாரிகளின் கல்வித் தகைமைகள் உடற் தகுதிகளை உறுதி செய்வதற்கான பொதுவான நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதோடு அதற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

04. சேவையில் அமர்த்துவதற்கான ஒழுங்குவிதிகள்: அரசாங்க சேவையில் நியமனங்களை கட்டுப்படுத்தும் பொதுவான ஒழுங்குவிதிகளுக்கும், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைச் சட்டங்களுக்கும், காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் 2019.10.01 ஆம் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப் பட்ட தொல்பொருட் திணைக்கள நிறைவேற்றுச் சேவைப் பிரிவின் (SL-01-2025) ஆட்சேர்ப்பு நடைமுறையின் சகல ஒழுங்குவிதிகளுக்கும், அவ் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு விதிக்கப்பட்டிருக்கும் அல்லது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் சகல திருத்தங்களுக்கும் அமைவாக தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரி அப்பதவி நிலையின் (SL-01-2025) III ஆம் வகுப்பிற்கு நியமிக்கப்படுவார்.

04.1 அளிக்கப்படும் பதவியின் கடமைகளை குறிப் பிட்ட தினத்தில் பொறுப்பேற்கவோ அல்லது நியமிக்கப்பட்ட கடமைகளின் அல்லது நியமிக்கப்பட்ட பிரதேசத்தில் கடமைகளைப் பொறுப்பேற்பதை நிராகரிக்கவோ அல்லது தவிர்க்கவோ செய்யும் விண்ணப்பதாரிகளின் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

05. **மாதாந்த சம்பள அளவுத் திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய இலக்கம் 10/2025 இனைக் கொண்ட அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை 1 இன்படி இப்பதவிக்கான மாதாந்த சம்பள அளவு ரூபா 82,150.00 - 10 x 2,400 - 8 x 2,940 – 17 x 3,900 - ரூபா 195,970.00 (SL-01-2025) ஆகும். அச்சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு அமையவே உங்களுக்கு சம்பளம் வழங்கப்படும்.

நியமனத் திகதியிலிருந்து 03 வருட காலப்பகுதிக்குள் தகுதிகாண் தடைதாண்டல் மற்றும் 11 ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெற்ற 03 வருடங்களுக்குள் இரண்டாம் தகுதிகாண் தடைதாண்டலையும், 1 ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு பெற்ற 05 வருடங்களுக்கு முன்னர் மூன்றாம் தகுதிகாண் தடைதாண்டலிலும் சித்தி பெறல் வேண்டும். 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கமைய குறித்த அரச கரும மொழி/ அரச கரும மொழிகளில் தேர்ச்சி அடைதல் வேண்டும்.

06. **உடல் நலம் மற்றும் நடத்தை:**

சகல விண்ணப்பதாரியும் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக்கூடியவாறு நல்ல உடல் மற்றும் மனநலத்துடன் கூடிய சிறந்த நன்னடத்தை கொண்ட ஒருவராக இருத்தல் வேண்டும்.

07. **தகைமைகள்:**

I. இலங்கைப் பிரசையாக இருத்தல்.

II. கல்வி தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் :

| *தொ.இ.* | *பதவி* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|---|
| I. | உதவிப் பணிப்பாளர் (ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தல்)<br>உதவிப் பணிப்பாளர் (கல்வெட்டுகள் மற்றும் நாணயவியல்)<br>உதவிப் பணிப்பாளர் ( அகழ்வு) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட தொல்லியல் தொடர்பான கௌரவ பட்டம் பெற்றிருத்தல் |
| II. | உதவிப் பணிப்பாளர் (பிராந்திய) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட தொல்லியல் தொழில்நுட்ப விடயத்துடன் கூடிய பொறியியல் தொழில்நுட்ப பட்டம் நிர்மாண சூழல் தொடர்பான பட்டம் கட்டடக் கலை தொடர்பான பட்டம் தொல்பொருள் கௌரவ பட்டம் பெற்றிருத்தல். |

குறிப்பு: மேலே 7. II இல் ஒவ்வொரு பதவிக்குமான கல்வித் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்ட பட்டத் தகைமைகள்:

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு பல்கலைக்கழகம் அல்லது அரசாங்க பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டம்

அல்லது

2. இலங்கைப் பாராளுமன்ற சட்டமூலமொன்றினால் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெறப்பட்ட பட்டம்

அல்லது

3. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 25 A உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் ஒன்றாக இருத்தல்.

III. இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க விண்ணப்பம் கோரப்படும் கடைசித் தினத்தன்று, பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வ தற்கான சகல தகைமைகளையும் சகல முறையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

IV. விண்ணப்பங்கள் கோரப்படும் கடைசித் தினத்திற்கு 21வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.

- மேற்குறித்த கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்த தொல்பொருட் திணைக்களத்தில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத செயற்பாடானதும் திருப்திகரமானதுமான சேவைக்காலத்தினைக் கொண்ட பதவியில் நிரந்தர மாக்கப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான ஆகக்கூடிய வயதெல்லை 45 வயதாகும்.

08. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூபா 1,000.00 ஆகும். இதனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் திம்பிரிகஸ்யாய கிளையின் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் கணக்கு இலக்கம் 086100169026207 இற்கு வைப்புச் செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு / இலத்திரனியல் ஊடாக வைப்புச்செய்யப்பட்ட பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தின் குறித்த கட்டத்தில் ஒட்டப்படல் வேண்டும். இக்கட்டணம் மீள் செலுத்தப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்)

09. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

I. சமர்ப்பிக்கப்படவேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் காணப் படுகின்றது. விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பத்தை தாளில் தயார் செய்து முதற் பக்கத்தை இலக்கம் 1 இலிருந்து 4 வரையிலும் 02 ஆம் பக்கத்தை இலக்கம் 5 இலிருந்து 9 வரையிலும் 03 ஆம் பக்கத்தை இலக்கம் 10 இலிருந்து 13 வரையிலுமாக வரும் வகையில் தயார் செய்தல் வேண்டும். மாதிரிப் படிவத்தினை ஒத்திராத விண்ணப்பங்கள் மற்றும் முறைப்படி பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதியினை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.)

II. விண்ணப்பப்படிவம் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றவுள்ள மொழியில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். மேலும், ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தினை மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

**விருப்பத்தினைத் தெரிவித்தல்:**

விண்ணப்பதாரி ஒருவர் ஒவ்வொரு பதவிக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகளைக் கொண்டிருப்பின் அவர் பல பதவிகளுக்கு விண்ணப் பிக்க முடியும். அவ்வாறு விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரி ஒவ்வொரு பதவிக்குமான தனது விருப்பத்தை வரிசைக் கிரமமாக விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும்.

**குறிப்பு:** ஒரு பதவியைவிடவும் அதிகமான பதவிகளுக்கு விண்ணப்பம் செய்யும்போது விண்ணப்பதாரியினால் விண்ணப்பத்தில் குறிப் பிடப்பட்ட விருப்பம் தொடர்பான வரிசைக் கிரமத்தினை பின்னர் திருத்த அனுமதியளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரியினால் விருப்பினைத் தெரிவிக்காத பதவிகளுக்கு நியமனம் செய்வதற்காக கோரப்படும் கோரிக்கைகள் எக்காரணம் கொண்டும் மீள ஆராயப்படமாட்டாது.

III. பரீட்சைக்காக சரியான முறையில் பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 2026.07.27 திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் தொல்பொருள் பணிப்பாளர் நாயகம், ஸ்ரீமத் மாக்கஸ் பர்ணாந்து மாவத்தை, தொல்பொருட் திணைக்களம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்பத்திரம் இடப்படும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "தொல்பொருள் திணைக்கள நிறைவேற்றத் தரம் (SL-01) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை- 2026" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

IV. விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிஸ், முப்படை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், ரூபா 82,150.00 அல்லது அதற்கு மேற்பட்ட மாதாந்த திரட்டிய சம்பளம் பெறும் அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலர் ஒருவர், பௌத்த விகாரை ஒன்றின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு, ஏனைய சமயக் குரவர் ஒருவரால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

V. சகல விதத்திலும் பூரணப்படுத்தப்படாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பமொன்று தபாலில் தொலைதலோ அல்லது தாமதப்படுதலோ தொடர்பில் எதுவித முறைப்பாடுகளும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

10. பரீட்சை அனுமதி அட்டையின்றி பரீட்சை மண்ட பத்தினுள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பிக்கும் நாளில் பரீட்சை நடக்கும் மண்டப மேற்பார்வையாளருக்கு தனது கையொப்பத்தினை சான்றுப்படுத்திய அனுமதி அட்டையை மட்டுமே வழங்குதல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கலானது அவர் பரீட்சைக்குத் தோற்று வதற்கான தகுதியினைக் கொண்டவரெனக் கருதுவதாக அமையாது.

10 (i) பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட தும் அது தொடர்பில் குறுஞ்செய்தி (SMS) மூலம் பரீட்சார்த்திக்கு அறிவிக்கப்படும். குறுஞ்செய்தி கிடைக்கப்பெற்ற இரண்டு அல்லது மூன்று தினங்களுக்குப் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத பரீட்சார்த்தி ஒருவர் அது தொடர்பில் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திற்கு அறிவித்தல் வேண்டும். அதன் போது, விண்ணப்பதாரியின் பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர் என்பன குறிப் பிடப்படல் வேண்டும்.

**பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்:**

தாம் தோற்றவிருக்கும் ஒவ்வொரு பாடவிடயம் தொடர்பிலும் மண்டப மேற்பார்வையாளர் திருப்தி யடையும் வகையில் பரீட்சார்த்தி தனது ஆளடை யாளத்தினை நிருபிக்க வேண்டும். இதற்கு, கீழ் வரும் ஆவணங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை ;
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு ;
iii. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

11. **பொய்யான தகவல்களை வழங்கியதற்கான தண்டனை:**

பரீட்சார்த்தி ஒருவருக்கு தகைமைகள் இல்லை என அறியப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் காலத்திலோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்த சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படும். பரீட்சார்த்தி சமர்ப்பித்திருந்த ஏதேனுமொரு தகவல் பொய்யானதெனத் தெரிந்திருந்தும் சமர்ப்பித்திருந்தா ரென உறுதிப்படுத்தப்படுமிடத்தோ அல்லது ஏதாவ தொரு முக்கியமான விடயம் ஒன்று வேண்டுமென்றே அவரால் மறைக்கப்பட்டிருந்தாலோ அவரை அரசாங்க சேவையிலிருந்து நீக்க முடியும்.

12. இந்த ஒழுங்குவிதிகளில் காணப்படாத விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் செயலாளரின் தீர்மானத்தின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

13. **தேர்ந்தெடுக்கும் முறை** : கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாட விதானங்களை உள்ளடக்கிய எழுத்து மூல பரீட்சை ஒன்று நடாத்தப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சகல வினாத்தாள்களுக்கும் தோற்றிய பரீட்சார்த்திகளில் தகைமை பெற்றோர் மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

| *வினாத்தாள்* | *பாடவிதானம்* |
|---|---|
| பொது வினாத்தாள் | • இந்நாட்டின் தொல்பொருள் சட்டங்களும் ஒழுங்குவிதிகளும்<br>• தேசிய, வலய மற்றும் பல்வேறு உலக சமூகங்கள், பொருளாதார சூழல் மற்றும் இந்நாட்டு சமூக, கலாசார, பொருளாதார, அரசியல், கல்வி மற்றும் விஞ்ஞான காரணிகள் மற்றும் அவற்றின் அடிப்படை பண்புகளின் மாற்றங்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் புரிந்துணர்வினை மதிப்பிடக்கூடிய வினாத்தாளாகும். |
| பொது அறிவு | இதன் மூலம் எண்சார், மொழிசார், வடிவ கட்டமைப்புகள் மற்றும் தொடர் புகள் சம்பந்தமாக எழும் சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் தேர்ச்சி, தர்க்கரீதியான புரிந்துணர்வு, விளங்கிக் கொள்வதற்கான ஆற்றல், ஏனைய நிலைமைகளுக்குப் பொருத்தமாக மாற்றிக் கொள்ளும் திறன் மற்றும் தீர்மானங்களுக்கு செல்லுதல் தொடர்பில் பரீட்சார்த்தியின் அறிவு மட்டத்தினை மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. |
| முகாமைத்துவ உளச்சார்பு | சிக்கல்கள் மற்றும் அவற்றின் காரணங்களை அடையாளம் காணல், தீர்மானங்களை எடுத்தல், ஏனையோருடனான தனிப்பட்ட தொடர்புகள், தொடர்பாடல் திறமைகள், சுய ஒழுக்க கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களைத் தயாரித்தல் மற்றும் உணர்ச்சிபூர்வ நுண்ணறிவு ஆகியவற்றினால் பரீட்சார்த்திக்கு முன்வைக்கப்படும் சம்பவங்கள் மற்றும் வாய்ப்புக்களின் உதவியுடன் அவருக்குள்ள ஆற்றல்களை மதிப்பீடு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. |

14. சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலில் மொழி உரைகளுக்கிடையே ஏதேனும் வேறுபாடுகள் அல்லது தெளிவின்மை காணப்படுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழிமூல அறிவித்தலின்படியே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள்
அமைச்சு.

**புத்தசாசன,சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் தொல்பொருட் திணைக்களத்தில் நிறைவேற்றுச் சேவைப்பிரிவின் (SL-1) தரம் III பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்- 2026**

(அலுவலக பாவனைக்கு)

1.
2.
3.
4.

(விண்ணப்பிக்கும் பதவிகளை வரிசைக்கிரமமாக இங்கு குறிப்பிடவும்)

பரீட்சைக்கு தோற்றும் மொழி
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

1. 1.1 முழுப்பெயர்(திரு./ திருமதி / செல்வி) :.............................................................

(சிங்களத்தில்/தமிழில்) .............................................................

1.2 முழுப்பெயர்(MR/MRS/MISS) : .............................................................

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :.............................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ....................................................................................

(சிங்களத்தில்/தமிழில்) : ....................................................................................................................

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (MR/MRS/MISS) ........................................................................................

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :..................................................................................................................

1.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :..............................................................................................................

2. பெண்/ஆண் : பெண் : ☐ ஆண் : ☐

3. 3.1 பிறந்த திகதி : ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

3.2 .2026.07.27 ஆந் திகதிக்கு வயது: வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

4. 4.1 நிரந்தர முகவரி :...................................................................................................

(சிங்களத்தில்/தமிழில்) :...............................................................................................

4.2 நிரந்தர முகவரி : ................................................................................................

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்).........................................................................................

4.3 தொலைபேசி இலக்கம் : நிலையான - ...................................................................................

கையடக்க -..............................................................................

5. கல்வித் தகைமைகள்:

| *பல்கலைக்கழகம்* | *பட்டத்தின் பெயர்* | *செயல்வலுப் பெறும் திகதி* | *வகுப்பு* |
|---|---|---|---|
| | | | |

6. தொழில்சார் தகைமைகள் :

| *நிறுவனம்* | *தொழிற் தகைமை* | *பாடநெறிக்கான காலம்* |
|---|---|---|
| | | |

7. தொல்பொருள் திணைக்கள சேவையில் இருப்பின் தற்போதைய பதவி தொடர்பான விபரங்கள் :

7.1 தற்போது சேவைபுரியும் இடம் :………………………………………………………………………………

7.2 தற்போதைய பதவியும் வகுப்பும் :………………………………………………………………………………

7.3 பதவிக்கான நியமனத் திகதி :………………………………………………………………………………

7.4 திணைக்களத்தின் மொத்த சேவைக்காலம் :………………………………………………………………………….

7.5 பதவியில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி :………………………………………………………………………….

8. நீர் எப்போதாவது குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ஆம்/இல்லை

9. பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000.00 இனை செலுத்திய பற்றுச்சீட்டினை கீழே காணப்படும் கூண்டில் ஒட்டவும்.

| |
|---|
| |

10. **விண்ணப்பதாரியின் உறுதிமொழி** :

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் சகல பிரிவுகளையும் சரியாக நிரப்பியுள்ளேன் எனவும், என்னால் தரப்பட்டுள்ள இவ்விபரங்கள் பொய்யானவை என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் கண்டறியப்பட்டால், தகுதியற்றவனாவேன் என்றும், நியமனம் பெற்றதன் பின்னரெனில் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் உள்ளாவேன் என்பதனை நானறிவேன் எனவும், சகல சட்டதிட்டங்களுக்கும் உட்படுவேன் என்பதனையும் அறியத் தருகிறேன்.

.................................................... ....................................................
திகதி விண்ணப்பாதாரியின் கையொப்பம்

11. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................. அவர்களை நான் பிரத்தியேகமாக அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.................................................... ....................................................
திகதி கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

12. தொல்பொருட் திணைக்கள சேவையில் உள்ளவரெனில் பிரிவுத்தலைவர் பணிப்பாளர் உதவிப்பணிப்பாளர் அல்லது பிராந்திய உதவிப்பணிப்பாளரின் பரிந்துரை

இவ் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி............................................................. எனது பிரிவில்/ அலுவலகத்தில் ............................................ஆம் திகதியிலிருந்து .................................................... பதவியில் சேவை புரிபவரெனவும், அவரால் தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.................................................... ....................................................
திகதி பிரிவுசார் பணிப்பாளர்/ உதவிப்பணிப்பாளர் அல்லது
பிராந்திய உதவிப் பணிப்பாளரின்
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்

13. திணைக்களத் தலைவரின் பரிந்துரை (தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................................, இவ்வலு வலகத்தில் ........................................... ஆம் திகதியிலிருந்து .................................... பதவியில் சேவை புரிபவரெனவும் அவரால் தரப்பட்டுள்ள தகவல்கள் பிரத்தியேகக் கோவையின்படி சரியானவை எனவும், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் தொல்பொருட் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைப் பிரிவின் (SL-1) தரம் III பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்படின் இந்நிறுவன சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

.................................................... ....................................................
திகதி நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
உத்தியோகபூர்வ முத்திரையும்

07-45

## அரசாங்க சேவைகள் ஆணைக் குழு

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

### இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2026

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் இலங்கைத் தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பிற்கான பின்வரும் போதனாசிரியர் பதவிகளுக்கு தகுதியான இலங்கை குடிமக்களிடமிருந்து (பிரசைகள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பரீட்சை 2026, ஒற்றோபர் மாதம் கொழும்பு நகரில் பரீட்சை நாயகம் அவர்களால் நடாத்தப்படும். அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் அவர்களின் ஆலோசனையின் பேரில் இந்தப் பரீட்சை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்யவோ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு ஏற்ப பரீட்சைகள் ஆணையாளர் நாயகத் துக்கு அதிகாரம் உண்டு.

பரீட்சை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுவதற்கான கடைசித் திகதி 2026, யூலை 31 ஆம் திகதியாகும்.

**வெற்றிடங்கள்**

| *பதவி இலக்கம்* | *பதவி* | *மொழி மூலம்* |
|---|---|---|
| 01. | போதனாசிரியர் (தொழில்நுட்ப வரைவு) | சிங்களம் |
| 02. | போதனாசிரியர் (தொழில்நுட்ப வரைவு) | தமிழ் |
| 03. | போதனாசிரியர் (விவசாயம்) | சிங்களம் |
| 04. | போதனாசிரியர் (விவசாயம்) | தமிழ் |
| 05. | போதனாசிரியர் (தகவல் தொழில்நுட்பம்) | சிங்களம் |
| 06. | போதனாசிரியர் (மோட்டார் இயந்திரம்) | சிங்களம் |
| 07. | போதனாசிரியர் (மோட்டார் இயந்திரம்) | தமிழ் |
| 08. | போதனாசிரியர் (குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல்) | சிங்களம் |
| 09. | போதனாசிரியர் (குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல்) | தமிழ் |
| 10. | போதனாசிரியர் (மின்னியல்) | சிங்களம் |
| 11. | போதனாசிரியர் (மின்னியல்) | தமிழ் |
| 12. | போதனாசிரியர் (உலோக வேலை) | சிங்களம் |
| 13. | போதனாசிரியர் (உலோக வேலை) | தமிழ் |
| 14. | போதனாசிரியர் (கட்டடத் தொழில்) | சிங்களம் |
| 15. | போதனாசிரியர் (கட்டடத் தொழில்) | தமிழ் |

**1.0 ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை :**

1.1 மின்னியல், உலோக வேலை, தொழில்நுட்ப வரைதல், மோட்டார் இயந்திரம், குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல், கட்டடத் தொழில் ஆகிய தொழில் முறைத் துறைகளில் போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே எழுத்துப் பரீட்சைக்கு எழுத வேண்டும். மேலும் ஒரு தொழில் முறைப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவார்கள்.

1.2 எழுத்துப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தாலும் தொழில்முறைப் பரீட்சை யானது அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவில் நியமிக்கப்பட்ட ஒரு தொழில் முறைப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும். தொழில்முறைப் பரீட்சையின் முடிவுகள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுக்கமைய பரீட்சைகள் ஆணையாளர் நாயகத் தினால் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு திறனறிவுப் பரீட்சை, பொது அறிவுப் பரீட்சை மற்றும் தொழில் முறைப் பரீட்சைகளின் மதிப்பெண்கள் வழங்கப் படுகின்றன.

1:1:1 எழுத்துப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட் சையில் மதிப்பீட்டு விகிதத்தின் அடிப்படையில் தனித் தனியாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடம் உள்ள இடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தகுதி வரிசைப்படி பட்டியலிடப் பட்டு, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவைகள் ஆணையகத்திற்குச் சமர்ப் பிக்கப்படுவார்கள்.

1.3 அதன் பிறகு விண்ணப்பதாரர்களின் தகுதிகளைச் சரிபார்ப்பதற்காக அவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண்

ணிக்கை எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில் முறைப் பரீட்சையில் பெற்ற மொத்த மதிப் பெண்களின் அடிப்படையில் தகுதி வரிசைப்படி வெற்றிடமாக உள்ள இடங்களின் எண்ணிக் கையின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணையகத்தால் தீர்மானிக்கப்படும்

1.4 மேலே எண் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள துறை களின் கீழ் வராத விவசாயத் துறை மற்றும் தகவல் தெழில்நுட்ப துறைகளில் உள்ள போதனசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதரரர்கள் எழுத்துப் பரீட்சையில் மொத்த மதிப்பெண்களின் அடிப்டையில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்றவர்களின் தகுதி வரிசைப் படி பட்டியலிடப்படுவார்கள். மேலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் அவர் களின் தகுதிகளை பரிசீலனை செய்வதற்காக ஒரு நேர்முகப் பரீட்சை குழுவிற்கு அழைக்கப் படுவார்கள்.

1.5 விண்ணப்பதாரர்களின் தகுதிகளைச் சரிபார்த்த பிறகு வெற்றிடமாக உள்ள இடங்களின் எண்ணிக் கையின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் எண் ணிக்கையிலானோர் சம்பந்தப்பட்ட பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

1.6 போதனாசிரியர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் போது அனுமதிக்கப்பட்டுள்ள வெற்றிட இடங்களின் எண்ணிக்கையில் 60% திறந்த முறைப் படி ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

1.7 வரையறுக்கப்பட்ட/திறந்த திட்டங்களின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட அதிகபட்ச ஆட்சேர்ப்பு சத வீதத்தை தேர்ச்சி மதிப்பெண்களைப் பெற்ற விண் ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் அங்கீ கரிக்கப்பட்ட எண்ணிக்கையிலான வெற்றிட இடங்கள் மற்ற ஆட்சேர்ப்பு இடங்களிலிருந்து தெரிவு செய்யபட்டு நிரப்பப்படும்.

1.8 முடிவுகளை வெளியிடுவதற்கான பொருத்தமான திகதியை நியமன அதிகாரி அறிவித்த பின்னர் இலங்கை பரீட்சைகள் திணைக்களமானது பரீட்சையில் கலந்து கொண்ட அனைத்துப் பரீட்சையாளர்களுக்கும் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற மதிப்பெண்கள்/எழுத்துப் பரீட்சையில் பெற்ற மொத்த மதிப்பெண்களைக் குறிப்பிடும் முடிவுத்தாளை அஞ்சல் மூலமாகவோ அல்லது www.results.exams.ov.lk என்ற இணையத்தளத்தின் மூலமாகவோ வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.0 சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள் :**

2.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி இலக்கம் 2310/29 இல் 2022.12.14 ஆம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட பொதுச் சேவை ஆணையகத்தின் செயல் முறை விதிகள், ஸ்தாபனங்களின் சட்டத்தின் விதிகள், நிதி ஒழுங்கு முறைகள் மற்றும் இலங்கைத் தொழில் நுட்ப கல்விச் சேவை விதிகள் ஆகியவை பொதுச் சேவைக்கான நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளாகும் (தரம் III போதனாசிரியர் சேவைப் பிரிவிற்கான) தேர்ந் தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் 2020.07.06 ஆம் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேவை அரசியலமைப்பின் ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகள் மற்றும் அதில் செய்யப்படும் தற்போதைய மற்றும் எதிர்காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு இந்தப் பதவியில் நியமிக்கப்படுவார்கள்.

2.2 இந்த பதவி நிரந்தரமானதும் இது ஓய்வூதிய உரித்துடையதுமாகும் தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் தொடர்ந் தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும் மேலும் தாங்கள் விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/தபுதாரர், அனாதைகள் ஓய்வூத்திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத் துதல் வேண்டும் அரசாங்கத்தால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.3 இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் நியமன அதிகாரிகள் மூன்று (03) ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவர்கள் ஆவார். அதாவது நன் னடத்தைக் காலத்தினுள் முதலாவது செயற்றிறன் தடைதாண்டலில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.4 பணியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து அதிகாரிகளும் ஒரு தொழிற் கல்வி தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியக் குழு அல்லது திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் கற்பித்தல்/ பயிற்சி வழி முறைகள் குறித்த 300 மணி நேரப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு நியமனங்களை உறுதி செய்வதற்காக இந்தப் பயிற்சிச் சான்றி தழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.

2.5 பணியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து அதிகாரிகளும் பதவி அமர்த்தப்படுவதற்கு முன்னர் குறைந்த பட்சம் நான்கு (04) வாரங்கள் (160 மணிநேரம்) அடிப்படை கற்பித்தல் முறை பயிற்சி வகுப்பை முடிக்க வேண்டும். பயிற்சிக் காலத்தின் முடிவில் அதிகாரியின் கற்பித்தல் திறன் மதிப்பீடு செய்யப்பட்டு ஒரு சன்றிதழ் வழங்கப்படும்.

2.6 பொது நிர்வாக சுற்றறிக்கையின் 01/2014 மற்றும் அது தொடர்பான சுற்றறிக்கை விதிகளின் படி இரண்டாவது மொழியில் 5 ஆண்டுகள் புலமை பெற்றிருக்க வேண்டும்.

2.7 அரச மொழியினைத் தவிர வேறு மொழியில் பணியில் சேரும் அதிகாரிகள் தகுதி காண் காலத்தில் தேவையான மொழித் திறனைப் பெற வேண்டும்.

2.8 இந்த நியமனமானது பொதுச் சேவை ஆணைக் குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனங்கள் சட்டம், அரசாங்க நிதி ஒழுங்கு முறைகள் மற்றும் பிற திணைக்ளத்தின் ஆணைகளுக்கு உட்பட்டது.

2.9 இத்துறையைச் சேர்ந்த ஏதேனும் ஒரு தொழில்நுட்ப/ தொழில்துறை நிறுவனத்தில் பரிந்துரைக்கப்பட்ட படி பணியாற்றக் கடமைப்பட்டுள்ளார்.

2.10 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் செய்யத்தவறும் அல்லது தவிர்க்கும் ஒரு நியமனதாரரின் நியமனம் இரத்துச் செய்யப் படலாம்.

**3.0 சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் :**

2025.03.25 ஆம் திகதி இடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் படி இந்தப் பதவியானது SL – 1 - 2025 என்ற பதவிக்குரிய திரட்டிய சம்பளத் திட்டம் ரூபா 82,150.00 - 10 x 2400 – 8 x 2940 – 17 x 3900 – ரூபா 1,95,970.00 என்ற மாதாந்த சம்பள விகிதத்திற்கு தகுதியுடையதாக அமைய வழங்கப்படும் சம்பளம் மேற்கூறிய சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள படி நிர்ணயிக்கப்படும். இது தவிர இந்தப் பதவியில் இருப்பவர் அரசாங்கத்தால் அவ்வப் போது வழங்கப்படும் மேலதிக இதர படிகளுக்கு தகுதியுடயவர் ஆவர்.

**4.0 ஆட்சேர்ப்புத் தகைமைகள் :**

4.1 பொதுத் தகைமைகள்

சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமை களை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

4.1.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.1.2 சிறந்த குணவியல்புகளை உடையவர்களாகவும் மற்றும் ஆரோக்கியமான உடல் தகைமை யுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

4.1.3 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று விண்ணப்பதாரிகள் 21 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4.1.4 எந்தவொரு நபரும் எந்தவொரு மதத்திலோ அல்லது மதப் பிரிவிலோ துறவறம் அமைப்பை வகிக்கக் கூடாது.

4.1.5 அரசாங்க ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் ஐந்தாம் V அத்தியாயத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தகுதியின்மைகளில் ஏதேனும் ஒன்றால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடாது.

4.1.6 இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் பணி யாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை சேவை ஆற்றுவதற்கும் உடல் மற்றும் மனத் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.

**4.2 கல்வி மற்றும் தொழில் முறைத் தகுதிகள் :**

| *தொடர் இலக்கம்* | *கல்வி மற்றும் தொழில் முறைத் தகுதிகள்* | *அனுபவம்* |
|---|---|---|
| 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடப்பிரிவை முதன்மைப் பாடமாக கொண்டு பட்டம் பெற்றிருக்க வேண்டும் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு கல்வி நிறுவனத்திலிருந்து அத்துறைக்குத் தொடர்புடைய துறையில் NVQ மட்டம் 7 க்கும் இணையான SLQF மட்டம் 5 சான்றிதழுக்கான தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். | தேவையான கல்வி / தொழில் முறைத் தகுதிகளைப் பெற்ற பிறகு ஒரு அரசாங்கத் துறை அல்லது உள்ளூராட்சி அமைப்பு அல்லது நிறுவனங்களின் சட்டத்தின் கீழ் அல்லது பதிவு செய்யப்பட்ட கல்வி / பயிற்சி நிறுவனத்தில் விண்ணப்பித்த பாடப்பிரிவில் 3 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலையில் விண்ணப்பித்த துறை சார்ந்த பதவியில் 3 வருட தொழில்முறை அனுபவம் அல்லது மேற் குறிப்பிடப்பட்ட இரண்டிலும் 03 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். |

05. **பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சை கட்டணம் ரூபா 600 ஆகும். ஆன்லைன் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகள் மூலமாக மட்டுமே கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

i. எந்தவொரு வங்கிக் கடன் அட்டை மூலமாகவும் (Any Bank Credit Card);

ii. இணையவழிப் பணப்பரிவர்த்தனை வசதியுள்ள ஏதேனும் ஒருவங்கிப் பற்று அட்டை (Any Bank Debit Card With the Facility of Internet Transactions);

iii. இலங்கை வங்கியின் இணைய வழிவங்கிச் சேவை/ Flex செயலி மூலம் (Online Banking Method / Flex App of Bank of Ceylon);

iv. இலங்கை வங்கி கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon ).

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிடப்பட்ட முறையில் பணம் செலுத்துவது தொடர்பான வழி முறைகள், பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப வழி முறைகள் என்ற தலைப்பின் கீழ் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் செலுத்தியதற்கான உறுதி குறுஞ் செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (e-mail) மூலம் தெரிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும். குறைவாகக் கட்டணம் செலுத்தப்பட்ட விண் ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப் பட்ட கட்டண முறைகள் மூலம் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் ஏற்படும் எந்தப் பிழைகளுக்கும் இலங்கை பரீட்சைகள் திணைக்களம் பொறுப் பாகாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட தொகை, எந்தக் காரணத்திற்காகவும் திருப்பித் தரப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

6.0 **விண்ணப்பிக்கும் முறை:**

6.1 விண்ணப்பப்படிவமானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத் தளத்தில் "Our Services'' என்பதன் "Online Applications Recruitment Exams/E.B. Exams" என்ற பிரிவில் கிடைக்கிறது. மேலும் விண்ணப்பங்களை இணைய வழியாக மட்டுமே சமர்ப்பிக்க (online) முடியும்.

6.2 இணைய வழி விண்ணப்பங்கள் 2026, யூலை 06 அன்று காலை 09.00 மணிக்குத் தொடங்கி 2026, யூலை 31 அன்று இரவு 09.00 மணிக்கு முடிவடையும்.

6.3 தற்போது அரசாங்க / மாகாண சேவையில் பணியாற்றும் அதிகாரிகள், விண்ணப்பத்தின் ஒரு பிரதியினை தங்களது தனிப்பட்ட கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது, நிறுவனத் தலைவரால் சான்றழிக்கப்பட்ட விண்ணப்பத்தின் ஒரு பிரதியினையும், சேவை உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை இறுதித் திகதி வரை சமர்ப்பிப்பதில் தாமதம் செய்வதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் அனைத்தையும் விண் ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

6.4 வர்தகமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்திசெய்பவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அடிப்படையில், விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான கடைசி திகதிக்கு முன்னரோ அல்லது அன்றோ, முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப் பித்து, நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை கட்டணத்தைச் செலுத்திய விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்கப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் விண்ணப்ப தாரர்களுக்கு இணைய அறிவிப்பு/ குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கும். ஒரு விண்ணப்பதாரர் தனது அனுமதி அட்டையைப் பெறவில்லை என்றால் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளபடி, இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் அமைப்பு கிளைக்கு விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய விசாரணைகளை மேற் கொள்ளும் போது, விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தமது முழுப்பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட்டு, இணைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு கோரிக்கை கடிதத்தை அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பரீட்சை திணைக் களத்தால் கோரப்படும் எந்தவொரு தகவலையும் சரிபார்ப்பதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண் ணப்பப்படிவத்தின் பிரதியினையும், பரீட்சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டின் பிரதியினை கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். இப் படிவத்தைச் சரிபார்த்த பிறகு, ஏதேனும் திருத்தங்கள் தேவைப்பட்டால், பரீட்சை திணைக்களத்திற்கு உரிய நேரத்தில் தொடர்பு

கொண்டு, விண்ணப்பத்தில் உள்ளவாறு உரிய திருத்தங்களைச் செய்ய வேண்டும். பரீட்சை அறையிலோ/நேர்முகப் பரீட்சையிலோ செய்யப் படும் திருத்தக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

7.0 **பரீட்சைக்கான அனுமதி :**

7.1 அனைத்து வகையிலும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தனது கையொப் பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வை யாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

7.2 விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

7.3 சகல விண்ணப்பதாரிகளும் கடைப்பிடிக்க வேண் டிய சட்டதிட்டங்கள் வர்த்தமானி அறிவித்தலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பரீட்சைகள் நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங் களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டுள்ளனர். அந்த சட்ட திட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் தண்ட னைகளுக்கு உட்படுவதற்கு விண்ணப்பதாரிகள் கட்டுப்பட்டுள்ளனர்.

குறிப்பு: ஒரு பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குவது அவர் பரீட்சையில் கலந்து கொள்வதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அனுமதியாகக் கருதப்படக்கூடாது.

8.0 **பரீட்சை நடைமுறை மற்றும் பரீட்சை ஊடக மொழி :**

பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு பயிற்று மொழிகளிலும் நடாத்தப்படும்.

குறிப்பு:

i. பரீட்சையில் இடம் பெறும் அனைத்து வினாத்தாள் களுக்கும் ஒரு பரீட்சார்த்தி ஒரே மொழியில் பதிலளிக்க வேண்டும்.

ii. ஒரு பரீட்சார்த்தி தனது விண்ணப்பத்தில் குறிப் பிட்டுள்ள பரீட்சை பயிற்று மொழியை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

9.0 **விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர் தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடி யாகும்.

i. ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;

ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;

iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்

பரீட்சார்த்திகள் தங்கள் அடையாளத்தைச் சரிபார்ப் பதற்காக முகத்தை மறைக்காமலும் மின்னணுத் தொடர்பு சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதி செய்வதற்காகக் கைகளை மறைக்காமலும் பரீட்சை அறைக்குள் நுழைய வேண்டும். இதற்கு உடன்படாத பரீட்சார்த்திகள் பரீட்சை அறைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் அவர்கள் பரீட்சை அறைக்குள் நுழைந்த தருனத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை தங்கள் முகத்தையும் கைகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

10.0 **போலியான தகவல்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள்**

விண்ணப்பதாரி ஒருவருக்கு தகைமைகள் இல்லை யென கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் என எந்தவொரு சந்தர்ப் பத்திலும் அவரது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி போலியானவை எனத் தெரிந்து கொண்டே தகவல்களை முன்வைத்தல் அல்லது ஏதேனும் முக்கியமான ஒன்றை வேண்டுமென்றே மறைத்தல் தொடர்பில் கண்டு பிடிக்கப்பட்டால் அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

11.0 **எழுத்துப் பரீட்சை :**

பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்ட சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்கு கட்டாயம் தோற்ற வேண்டும். பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மட்டுமே நடைபெறும்.

| *பாடங்கள்* | *அதிகபட்ச மதிப் பெண் உச்ச எல்லை* | *குறைந்த பட்ச தேர்ச்சி மதிப்பெண்* |
|---|---|---|
| உளச்சார்பு (Aptitude test) | 100 | 40% |
| பொது அறிவு | 100 | 40% |

11.1 **எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்**

| *பாடங்கள்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 1. உளச்சார்பு பரீட்சை (Aptitude test) | விண்ணப்பதாரரின் எண் பகுத்தறியும் திறன், பகுத்தறிவு மற்றும் அறிவுசார் அறிவைச் சோதிப்பதன் மூலம் பணியின் கடமைகளுக்கான விண்ணப்பதாரர் அவரது தகுதியையும் ஆற்றலையும் பரீட்சிக்கும் நோக்கில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் பல தேர்வு மற்றும் சுருக்கமான விடை கேள்விகள் உள்ளடக்கிய ஒரு வினாத்தாள் ஆகும். இதில் அனைத்து கேள்வி களுக்கும் பதிலளிக்க வேண்டும். |
| 2. பொது அறிவு | இது இலங்கையின் அரசியல் சமூக பண்பாட்டு மற்றும் பொருளாதாரச் சூழல், பாதுகாப்பு மற்றும் தரநிலைகள், அத்துடன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் உள்ளிட்ட சர்வதேச நடப்பு நிகழ்வுகள் குறித்த பரீட்சை எழுதுபவர் அறிவை பரீட்சிக்கும் நோக்கம் கொண்ட ஒரு பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வினாத்தாள் ஆகும். |

12.0 **தொழில்முறை பரீட்சை :**

மின்னியல், உலோக வேலை, மோட்டார் இயந்திரம், குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல், கட்டடத் தொழில் மற்றும் தொழில்நுட்ப வரைதல், ஆகிய துறைகளில்) விண்ணப்பிக்கும் எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்கள் தத்தம் பாடப் பிரிவுகளுக்கான தொழிற்கல்வி பரீட்சையில் கலந்து கொள்ள வேண்டும்.

மதிப்பெண் 100 காலஅளவு – அதிகபட்சம் 06 மணி நேரம்

12.1 பரீட்சை விளக்கம்

| *பரீட்சை* | *பாடப் பகுதி* | *காலம்* | *மொத்த மதிப் பெண்* |
|---|---|---|---|
| தொழில் முறை பரீட்சை | 1. தொழில்துறை வரைபடங்கள் | அதிக பட்சம் மணித்தி யாலம் 06 | 100 |
| | 2. கட்டடத் தொழில் | | |
| | 3.மோட்டார் இயந்திரம் | | |
| | 4. குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல் | | |
| | 5. மின்னியல் | | |
| | 6. உலோக வேலை | | |

12.2 தொழில்முறைப் பரீட்சைக்கான தொடர்புடைய தொழில்சார் துறைகள் மற்றும் பாடத்திட்டம்.

| *பாடப் பகுதி* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 1. தொழில்துறை வரைபடங்கள் | இந்த தொழிற்கல்விப் பரீட்சைகள் தற்போது தொழில்நுட்பம் / தொழில்நுட்ப அறிவியல் துறைகளில் உள்ள தேசிய தொழிற்கல்வித் தகுதி மட்டம் 5 (NVQ– 5) பாடநெறிகளில் நடாத்தப்படும் செய்முறைப் பரீட்சைகளுக்கு இணையான மட்டத்தில் நடாத்தப்படும். இதில் பரீட்சார்த்தி தனது தொழில்நுட்ப அறிவு தொடர்பான இயந்திரவியல் சூத்திரங்களை பயன்படுத்துதல், கருவிகளை அடையாளம் கண்டு பயன்படுத்துதல், மற்றும் அந்த கருவிகளையும் உபகரணங்களை பயன் படுத்தி மாணவர்களுக்குத் தனது தொழில்நுட்பத் திறன்களை வெளிப்படுத்துதல் ஆகிய திறன்களில் பரீட்சிப்பர். |
| 2. கட்டடத் தொழில் | |
| 3. மோட்டார் இயந்திரம் | |
| 4. குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல் | |
| 5. மின்னியல் | |
| 6. உலோக வேலை | |

13.0 **நேர்முகப் பரீட்சை :**

போட்டிப் பரீட்சையில் திறமை அடிப்படையில் தகைமை பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். (நேர்முகப் பரீட்சைக்காக எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது)

14.0 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைப்படி மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 03 ஆம் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிப்பது தொடர்பில் உரிய பொது நிபந்தனைகள் மற்றும் 2020.07.06 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2183/20 ஐக் கொண்ட அரசாங்க வர்த்தமானியின் பொது 01 ஆம் பகுதியின் கீழுள்ள கருத்துக்கு நியமிக்கப்படும் "இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் சேவைப் பிரமாணத்தின்பால்" விண்ணப்பதாரிகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையான பந்திகளின் பிரிவுகள் பதவிக்குப் பொருத்தமான வகையில் உரித்தாகும்.

15.0 வெற்றிடங்களின் ஒரு பகுதியைப் பூரணப்படுத்துவதற்கான அல்லது சகலதையும் பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவிற்கே உள்ளது.

16.0 இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின் அவ்வேளை சிங்கள மொழி வாசகம் மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்

செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி
அமைச்சு.

2026

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக் குழு**

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் (திறந்த) போட்டிப் பரீட்சை - 2026

| விண்ணப்பிக்கும் பதவி | பதவி இலக்கம் | பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழிமூலம் |
|---|---|---|
| | | |

01. முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம் : SILVA A.B.

02. முழுப்பெயர் :

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

03. (அ) அலுவலக முகவரி :

.............................................................................................................................................................

.............................................................................................................................................................

(ஆ) தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :

.............................................................................................................................................

.............................................................................................................................................

(இ) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :.................................................................................................

04. (அ) நீர் இலங்கைப் பிரசையா என்பது பற்றி ஆம் ☐ இல்லை ☐

05. பால் : ஆண்/ பெண் :.........................................................................................................................

06. (அ) பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

07. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

08. கல்வித் தகைமை தொடர்பான விபரம் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி தொடர்பான சான்றிதழ்கள் உள்ளடக்கி) :

| *சித்தியடைந்த பரீட்சை* | *பல்கலைக்கழகம்/ நிறுவனம்* | *சித்தியடைந்த ஆண்டு* | *பாடத் துறை* | *மொழி மூலம்* |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

09. கற்பித்தல் மற்றும்/ அல்லது கள அனுபவம் தொடர்பான விவரங்கள் :

| *கற்பித்த/ சேவைபற்றிய நிறுவனத்தின் பெயர்* | *பதவி* | *பெற்றுக்கொண்ட சான்றிதழ்* | *கால எல்லை* | *பாடத்துறை/ தொழில் துறை* |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

10. முன்னர் வகித்த பதவி (காலப் பகுதி ஒழுங்கின் அடிப்படையில் சரியான திகதியைக் குறிப்பிட வேண்டும்) :

| *திணைக்களம்/ நிறுவனம்* | *சேவை செய்த நிலையம்* | *பதவி* | *நிரந்தரமானதா தற்காலிகமானதா என்பது பற்றி* | *இருந்து* | *வரை* | *கால எல்லை* |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |

11. நீர் நீதிமன்றத்தால் குற்றவாளியாக தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளீரா? ஆம்/இல்லை
அவ்வாறு இருப்பின் விபரத்தை குறிப்பிடவும்.
..........................................................................................................................................................................
..........................................................................................................................................................................

12. இதற்கு முன்னர் திணைக்களமொன்றில், கூட்டுத் தாபனமொன்றில் அல்லது சபையொன்றில் சேவையாற்றியுள்ளீரா? ஆம்/இல்லை

அவ்வாறாயின் அச்சேவையில் இருந்து நீக்கியமைக்கான/ நீக்கப்பட்டமைக்கான காரணத்தைக் குறிப்பிடவும்.
..........................................................................................................................................................................

13. உமக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதா? ஆம்/இல்லை
அவ்வாறு இருப்பின் விபரத்தை சுருக்கமாகக் குறிப்பிடவும் :

அவ்வாறு இருப்பின் விபரத்தை சுருக்கமாக குறிப்பிடவும்:-
..........................................................................................................................................................................

14. விண்ணப்பதாரரின் உறுதி மொழி :

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதையும் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சைகள் நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

.....................................................
திகதி :.......................................... விண்ணப்பதாரரின் கையொப்பம்

15. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தினை சான்றுபடுத்தல் :**

விண்ணப்பதாரரான ................................................................ (முழுப்பெயர்) அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவருடைய கையொப்பம் .............................................. அன்று என் முன்னிலையில் இடப்பட்டது என்றும் இதன் மூலம் சான்றளிக்கிறேன்.

.....................................................
சான்றழிக்கும் அதிகாரியின் கையொப்பம்

திகதி :..........................................
சான்றழிக்கும் அதிகாரியின் முழுப்பெயர் :..........................................
பதவி :..........................................
முகவரி :..........................................
பதவி முத்திரை

**தற்பாது அரசாங்க மற்றும் பொது சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்**

மேலே குறிப்பிடப்பட்ட விவரங்களைக் கொண்ட திரு./ திருமதி/ செல்வி ..................................................................... .. அவர்கள் இந்த நிறுவனத்தில் பணிபுரிகின்றார் என்றும் அவர் மேலே வழங்கிய தகவல்கள் சரியானவை என்றும், இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம் என்று இதன் மூலம் நான் சான்றழிக்கின்றேன்.

.....................................................
திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பதவி :..........................................
திகதி :..........................................
பதவி முத்திரை

07-46/1

## அரசாங்க சேவைகள் ஆணைக் குழு

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பிற்கான பின்வரும் போதனாசிரியர் பதவிகளுக்கு தகுதியான இலங்கை குடிமக்களிடமிருந்து (பிரசைகள்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பரீட்சை 2026, ஒற்றோபர் மாதம் கொழும்பு நகரில் பரீட்சை நாயகம் அவர்களால் நடாத்தப்படும். அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் அவர்களின் ஆலோசனையின் பேரில் இந்தப் பரீட்சை ஒத்திவைக்கவோ அல்லது இரத்துச் செய்யவோ அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கு ஏற்ப பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அதிகாரம் உண்டு.

பரீட்சை விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான கடைசித் திகதி 2026, யூலை மாதம் 31 ஆம் திகதியாகும்.

வெற்றிடம் காலியான இடங்கள்

| *பதவி இலக்கம்* | *பதவி* | *மொழி மூலம்* |
|---|---|---|
| 01. | போதனாசிரியர் (தொழில்நுட்ப வரைபு) | சிங்களம் |
| 02. | போதனாசிரியர் (தொழில்நுட்ப வரைபு) | தமிழ் |
| 03. | போதனாசிரியர் (விவசாயம்) | சிங்களம் |
| 04. | போதனாசிரியர் (விவசாயம்) | தமிழ் |
| 05. | போதனாசிரியர் (தகவல் தொழில்நுட்பம்) | சிங்களம் |
| 06. | போதனாசிரியர் (மோட்டார் இயந்திரம்) | சிங்களம் |
| 07. | போதனாசிரியர் (மோட்டார் இயந்திரம்) | தமிழ் |
| 08. | போதனாசிரியர் (குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல்) | சிங்களம் |
| 09. | போதனாசிரியர் (குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல்) | தமிழ் |
| 10. | போதனாசிரியர் (மின்னியல்) | சிங்களம் |
| 11. | போதனாசிரியர் (மின்னியல்) | தமிழ் |
| 12. | போதனாசிரியர் (உலோக வேலை) | சிங்களம் |
| 13. | போதனாசிரியர் (உலோக வேலை) | தமிழ் |
| 14. | போதனாசிரியர் (கட்டடத் தொழில்) | சிங்களம் |
| 15. | போதனாசிரியர் (கட்டடத் தொழில்) | தமிழ் |

1.0 **ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் முறை :**

1.1 மின்னியல், உலோக வேலை, தொழில்நுட்ப வரைதல், மோட்டார் இயந்திரம், குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல், கட்டடத் தொழில் ஆகிய தொழில் முறைத் துறைகளில் போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே எழுத்துப் பரீட்சையை எழுத வேண்டும். மேலும் ஒரு தொழில் முறைப் பரீட்சை மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள்.

1.2 எழுத்துப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணை யாளர் நாயகத்தாலும் தொழில்முறைப் பரீட்சை யானது அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவில் நியமிக்கப்பட்ட ஒரு தொழில் முறைப் பரீட்சை குழுவினால் நடாத்தப்படும். தொழில் முறைப் பரீட்சையின் முடிவுகள் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுக்கமைய பரீட்சைகள் ஆணையாளர் நாயகத் தினால் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு உளச்சார்பு பரீட்சை, பொது அறிவு பரீட்சை மற்றும் தொழில் முறைப் பரீட்சைகளின் மதிப்பெண்கள் வழங்கப் படுகின்றன.

1:1:1 எழுத்துப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சையில் மதிப்பீட்டு விகிதத்தின் அடிப் படையில் தனித்தனியாக 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்ற விண் ணப்பதாரர்கள் வெற்றிடம் உள்ள இடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தகுதி வரிசைப்படி பட்டியலிடப்பட்டு, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவைகள் ஆணையகத்திற்குச் சமர்ப்பிக்கப் படுவார்கள்.

1.3 அதன் பிறகு விண்ணப்பதாரர்களின் தகுதிகளைச் சரிபார்ப்பதற்காக அவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரர்களின் எண் ணிக்கை எழுத்துப் பரீட்சை மற்றும் தொழில் முறைப் பரீட்சையில் பெற்ற மொத்த மதிப் பெண்களின் அடிப்படையில் தகுதி வரிசைப் படி வெற்றிடமாக உள்ள இடங்களின் எண்ணிக் கையின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணையகத்தால் தீர்மானிக்கப்படும்.

1.4 மேலே எண் 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் கீழ் வராத விவசாயத் துறை மற்றும் தகவல் தெழில்நுட்ப துறைகளில் உள்ள போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பித்த விண்ணப்பதாரர்கள் எழுத்துப் பரீட்சையில் மொத்த மதிப்பெண்களின் அடிப்டையில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்றவர்களின் தகுதி வரிசைப்படி பட்டியலிடப் படுவார்கள். மேலும் அரசாங்க சேவை ஆணைக் குழுவினால்நிர்ணயிக்கப்படும்எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் அவர்களின் தகுதிகளை பரிசீலனை செய்வதற்காக ஒரு நேர்முகப் பரீட்சை குழுவிற்கு அழைக்கப்படுவார்கள்.

1.5 விண்ணப்பதாரர்களின் தகுதிகளைச் சரிபார்த்த பிறகு வெற்றிடமாக உள்ள இடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படும் எண்ணிக்கையிலானோர் சம்பந்தப்பட்ட பதவியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

1.6 போதனாசிரியர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் போது அனுமதிக்கப்பட்டுள்ள வெற்றிட இடங்களின் எண்ணிக்கையில் 40% வரையறுக்கப்பட்ட முறைப்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

1.7 வரையறுக்கப்பட்ட /திறந்த திட்டங்களின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட அதிகபட்ச ஆட்சேர்ப்பு சதவீதத்தை தேர்ச்சி மதிப்பெண்களைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையிலான வெற்றிட இடங்கள் மற்ற ஆட்சேர்ப்பு இடங்களிலிருந்து தெரிவு செய்யபட்டு நிரப்பப்படும்.

1.8 முடிவுகளை வெளியிடுவதற்கான பெருத்தமான திகதியை நியமன அதிகாரி அறிவித்த பின்னர் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களமானது பரீட்சையில் கலந்து கொண்ட அனைத்துப் பரீட்சையாளர்களுக்கும் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற மதிப்பெண்கள் / எழுத்துப் பரீட்சையில் பெற்ற மொத்த மதிப்பெண்களைக் குறிப்பிடும் முடிவுகளை அஞ்சல் மூலமாகவோ அல்லது www.results.exam.ov.lk என்ற இணையத் தளத்தின் மூலமாகவோ வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.

**2.0 சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்:**

2.1 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் விசேட வர்த்தமானி இலக்கம் 2310/29 இல் 2022.12.14 ஆம் திகதியில் பிரசுரிக்கப்பட்ட பொதுச் சேவை ஆணையகத்தின் செயல் முறைவிதிகள், ஸ்தாபனங்களின் சட்டத்தின் விதிகள், நிதி ஒழுங்கு முறைகள் மற்றும் இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவை விதிகள் ஆகியவை பொது சேவைக்கான நியமனங்களை நிர்வகிக்கும் பொதுவான நிபந்தனைகளாகும். **(தரம் III போதனாசிரியர் சேவை பிரிவிற்கான) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் 2020.07.06 ஆம் திகதியிடப்பட்ட விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சேவை அரசியலமைப்பின் ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகள் மற்றும் அதில் செய்யப்படும் தற்போதைய மற்றும் எதிர்காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு இந்தப் பதவியில் நியமிக்கப்படுவார்கள்.**

2.2 இந்த பதவி நிரந்தரமானதும் இது ஓய்வூதிய உரித்துடையதுமாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தால் தொடர்ந் தேச்சையாக எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்துக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும் தங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு /தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அது தொடர்பாக பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

2.3 இந்தப் பதவிக்கு நியமிக்கப்படும் நியமன அதிகாரி கள், நிறுவனங்கள் சட்டத்தின் அத்தியாயம் II பிரிவு 11.3 இன் படி 01 ஆண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டவர் ஆவார். நியமிக்கப்படும் அதிகாரிகள்

மூன்று(03)ஆண்டுகளுக்குள்தகுதிகாண்காலத்திற்கு உட்பட்டவர்கள் ஆவார். அதாவது நன்னடத்தைக் காலத்தினுள் முதலாவது செயற்றிறன் தடை தாண்டலில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2.4 பணியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப் படும் அனைத்து அதிகாரிகளும் ஒரு தொழிற் கல்வி தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு அல்லது திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் நடாத்தப்படும் கற்பித்தல்/ பயிற்சி வழி முறைகள் குறித்த 300 மணி நேரப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டு நியமனங்களை உறுதி செய்வதற்காக இந்தப் பயிற்சிச் சான்றி தழ்களைப் பெற்றிருக்க வேண்டும்.

2.5 பணியின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து அதிகாரிகளும் பதவி அமர்த்தப்படுவதற்கு முன்னர் குறைந்தபட்சம் நான்கு (04) வாரங்கள் (160 மணிநேரம்) அடிப் படை கற்பித்தல் முறை பயிற்சி வகுப்பை முடிக்க வேண்டும். பயிற்சி காலத்தின் முடிவில் அதிகாரியின் கற்பித்தல் திறன் மதிப்பீடு செய்யப் பட்டு ஒரு சன்றிதழ் வழங்கப்படும்.

2.6 பொது நிர்வாக சுற்றறிக்கையின் 01/2014 மற்றும் அது தொடர்பான சுற்றறிக்கை விதிகளின் படி இரண்டாவது மொழியில் 5 ஆண்டிற்குள் புலமை பெற்றிருக்க வேண்டும்.

2.7 அரசாங்க மொழியினைத் தவிர வேறு மொழியில் பணியில் சேரும் அதிகாரிகள் தகுதி காண் காலத்தில் தேவையான மொழித் திறனைப் பெற வேண்டும்.

2.8 இந்த நியமனமானது பொது சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிறுவனங்கள் சட்டம், அரசாங்க நிதி ஒழுங்கு முறைகள் மற்றும் பிற திணைக்களத்தின் ஆணைகளுக்கு உட்பட்டது.

2.9 இத் திணைக்களத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு தெழில்நுட்ப / தெழில்துறை நிறுவனத்தில் பரிந்துரைக்கப்பட்ட படி பணியாற்றக் கடமைப்பட்டுள்ளர். அப்படியிருந்தும் நீங்கள் சேவை செய்தாக வேண்டும்.

2.10 தமக்கு வழங்கப்பட்ட பதவியின் கடமைகளை உரிய திகதியில் செய்யத்தவறும் அல்லது தவிர்க்கும் ஒரு நியமனதாரரின் நியமனம் இரத்து செய்யப்படலாம்.

3.0 **சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் :**

2025.03.25 ஆம் திகதி இடப்பட்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் படி இந்தப் பதவியானது SL - 1 - 2025 என்ற பதவிக்குரிய திரட்டிய சம்பளத் திட்டம் ரூபா 82,150.00 - 10 x 2400 – 8 x 2940 – 17 x 3900 – ரூபா 1,95,970.00 என்ற மாதாந்த சம்பள விகிதத்திற்கு தகுதியுடையதாக அமைய வழங்கப்படும் சம்பளம் மேற் கூறிய சுற்றறிக்கையின் அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ள படி நிர்ணயிக்கப்படும்.

4.0 **ஆட்சேர்ப்புத் தகைமைகள் :**

4.1 **பொதுத் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தி இருத்தல் வேண்டும்.

4.1.1 இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.1.2 சிறந்த குணவியல்புகளை உடையவர்களாகவும் மற்றும் ஆரோக்கியமான உடல் தகைமையுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

4.2 கல்வி மற்றும் தொழில் முறைத் தகுதிகள் மற்றும் அனுபவங்கள்

| *தொடர் இலக்கம்* | *கல்வி மற்றும் தொழில் முறைத் தகுதிகள்* | *அனுபவம்* |
|---|---|---|
| 01. | *பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்திலிருந்து விண்ணப்பிக்கும் பாடப் பிரிவை முதன்மைப் பாடமாக கொண்டு பட்டம் பெற்றிருக்க வேண்டும். | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக் களத்தின் கீழ் MT-1-2025 சம்பள விகிதத்தைக் கொண்ட திறமைமிக்க பணியாளர், பண்ணை முகாமையாளர் பதவியிலோ அல்லது MT-2-2025 சம்பள விகிதத்தைக் கொண்ட ஆய்வக உதவியாளர் பதவியிலோ பரிந்துரைக்கப்பட்ட கல்வி/ தொழில்முறை தகுதியைப் பெற்ற பிறகு 5 ஆண்டுகள் திறமைமிக்க மற்றும் திருப்திகரமான பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.<br><br>அல்லது தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் திணைக் களத்தின் MN 6-2025 சம்பள விகிதத்தின் படி மதிப் பீட்டு அலுவலர் பதவிக்கு, விண்ணப்பித்த பாடப் பகுதியில் பரிந்துரைக்கப்பட்ட கல்வி/ தொழில்முறைத் தகுதிகளை பெற்று 03 ஆண்டுகள் திறமைமிக்க மற்றும் திருப்திகரமான பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| அல்லது | | |

| *தொடர் இலக்கம்* | *கல்வி மற்றும் தொழில் முறைத் தகுதிகள்* | *அனுபவம்* |
|---|---|---|
| 02. | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து விண்ணப்பித்த பாடப்பிரிவு தொடர்பான தேசிய தொழிற்கல்வித் தகுதி நிலை 06 டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். | தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக் களத்தின் கீழ் MT-1-2025 சம்பள விகிதத்தைக் கொண்ட திறன்மிகு பணியாளர், பண்ணை முகாமை யாளர் பதவியிலோ அல்லது MT-2-2025 சம்பள விகிதத்தைக் கொண்ட ஆய்வக உதவியாளர் பதவி யிலோ பரிந்துரைக்கப்பட்ட கல்வி/தொழில்முறை தகுதியைப் பெற்ற பிறகு 7 ஆண்டுகள் திறமைமிக்க மற்றும் திருப்திகரமான பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும். |
| | அல்லது | |
| 03. | மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்திடமிருந்து விண்ணப்பித்த பாடப்பிரிவு தொடர்பான தேசிய தொழிற்கல்வித் தகுதி நிலை 05 அல்லது அதற்கு இணையான டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். | தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் MT-1-2025 சம்பள விகிதத்தில் பகுதி கட்டுப்பாட்டாளர், விவசாயத் துறையினர், பட்டறை உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பித்து இருக்கும் போது பரிந்துரைக்கப்பட்ட கல்வி / தொழில்முறை தகுதியைப் பெற்ற பிறகு விண்ணப்பித்த பாடப் பகுதியில் 10 ஆண்டுகள் செயல்மிகு மற்றும் திருப்திகரமான பணி அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.<br>அல்லது<br>தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் MT-1-2025 சம்பள விகிதத் தைக் கொண்ட திறமைமிக்க பணியாளர், பண்ணை முகாமையாளர் பதவியில் இருப்பவர் பரிந்துரைக் கப்பட்ட கல்வி / தொழில்முறை தகுதியைப் பெற்ற பிறகு 09 ஆண்டுகள் செயல்மிகு மற்றும் திருப்தி கரமான அனுபவத்துடன்<br>அல்லது<br>தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக் களத்தின் கீழ் MT-7-2025 சம்பள விகிதத்தைக் கொண்ட திறமைமிக்க பணியாளர் (உயர் நிலை) பதவியில் இருக்கும் ஓர் அதிகாரியாக இருத்தல். |

05. **பரீட்சைக் கட்டணம்**:

பரீட்சை கட்டணம் ரூபா 600.00 ஆகும். நிகழ்நிலை அமைப்பில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகள் மூலமாக மட்டுமே கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

i. எந்தவொருவங்கிகடன் அட்டை மூலமாகவும் (Any Bank Credit Card )

ii. இணையவழிப் பணப்பரிவர்த்தனை வசதியுள்ள ஏதேனும் ஒருவங்கிப் பற்று அட்டை (Any Bank Debit Card With the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின் இணைய வழிவங்கிச் சேவை / Flex செயலி மூலம் (Online Banking Method / Flex App of Bank of Ceylon)

iv. இலங்கை வங்கி கிளையின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

(அ) மேற்குறிப்பிடப்பட்ட முறையில் பணம் செலுத்துவது தொடர்பான வழி முறைகள், பரீட்சை தொடர்பான தொழில் நுட்ப வழிமுறைகள் என்ற தலைப்பின் கீழ் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணம் செலுத்தியதற்கான உறுதி குறுஞ்செய்தி (SMS) அல்லது மின்னஞ்சல் (e-mail) மூலம் தெரிவிக்கப்படும். பரீட்சை கட்டணத்தின் முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும். குறைவாகக் கட்டணம் செலுத்தப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிடப்பட்ட கட்டண முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்துவதில் ஏற்படும் எந்தப் பிழைகளுக்கும் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் பொறுப்பாகாது.

(இ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட தொகை, எந்தக் காரணத்திற்காகவும் திருப்பித் தரப்படவோ அல்லது வேறு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

6.0 **விண்ணப்பிக்கும் முறை:**

6.1 விண்ணப்பப்படிவமானது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Service” என்பதன் “Online Applications RecruitmentExams/E.B. Exams” என்ற பிரிவில் கிடைக்கிறது. மேலும் விண்ணப்பங்களை இணைய வழியாக மட்டுமே சமர்ப்பிக்க (online) முடியும்.

6.2 இணைய வழி விண்ணப்பங்கள் 2026, யூலை 06 அன்று காலை 09.00 மணிக்குத் தொடங்கி 2026, யூலை 31 அன்று இரவு 09.00 மணிக்கு முடிவடையும்.

6.3 அதிகாரிகள் விண்ணப்பத்தின் ஒரு பிரதியினை தங்களது தனிப்பட்ட கோப்பில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் போது, நிறுவனத் தலைவரால் சான்றழிக்கப் பட்ட விண்ணப்பத்தின் ஒரு பிரதியினையும், சேவை உறுதிப்படுத்தல் கடிதத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை இறுதித் திகதி வரை சமர்பிப்பதில் தாமதம் செய்வதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் அனைத்தையும் விண்ணப்பதாரரே ஏற்க வேண்டும்.

6.4 வர்த்தமானிஅறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்பவர்கள் மட்டுமே விண்ணபித்துள்ளனர் என்ற அடிப்படையில், விண்ணப்பங்கள் பெறப்படுவதற்கான கடைசி திகதிக்கு முன்னரோ அல்லது அன்றோ, முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப் பித்து, நிர்ணயிக்கப்பட்ட பரீட்சை கட்டணத்தைச் செலுத்திய விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பரீட்சை அனுமதி அட்டைகளை வழங்கப் பட்டவுடன், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் விண்ணப்ப தாரர்களுக்கு இணைய அறிவிப்பு/ குறுஞ்செய்தி மூலம் தெரிவிக்கும். ஒரு விண்ணப்பதாரர் தனது அனுமதி அட்டையைப் பெறவில்லை என்றால் அறிவிப்பில் கூறப்பட்டுள்ளபடி, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவன பரீட்சைகள் அமைப்பு கிளைக்கு விசார ணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அத்தகைய விசாரணைகளை மேற்கொள்ளும் போது, விண்ணப்பதாரர் தாம் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், தமது முழுப்பெயர், தேசிய அடையாள அட்டை எண் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட்டு, இணைய அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு ஒரு கோரிக்கை கடிதத்தை அனுப் புவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பரீட்சை திணைக்களத்தால் கோரப்படும் எந்த வொரு தகவலையும் சரிபார்ப்பதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவத்தின் பிரதி யினையும், பரீட்சைக் கட்டணம் செலுத்திய தற்கான பற்றுச் சீட்டின் பிரதியினையும் கைவசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். இப் படிவத்தைச் சரிபார்த்த பிறகு, ஏதேனும் திருத்தங்கள் தேவைப்பட்டால், பரீட்சை திணைக்களத்திற்கு உரிய நேரத்தில் தொடர்பு கொண்டு, விண்ணப் பத்தில் உள்ளவாறு உரிய திருத்தங்களைச் செய்ய வேண்டும். பரீட்சை அறையிலோ / நேர்முகப் பரீட்சையிலோ செய்யப்படும் திருத்த கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

7.0 **பரீட்சைக்கான அனுமதி :**

7.1 அனைத்து வகையிலும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டை வழங்கப்படும். விண்ணப்பதாரி தனது கையொப் பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மண்டப மேற்பார்வை யாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

7.2 விண்ணப்பதாரி தமக்கு குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

7.3 பரீட்சைகள் நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் கட்டுப் பட்டுள்ளனர். அந்த சட்ட திட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப் படும் தண்டனைகளுக்கு உட்படுவதற்கு விண்ணப்ப தாரிகள் கட்டுப்பட்டுள்ளனர்.

**குறிப்பு:** ஒரு பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குவது அவர் பரீட்சையில் கலந்து கொள்வதற்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதற்கான அனுமதியாகக் கருதப்படக்கூடாது.

8.0 **பரீட்சை நடைமுறை மற்றும் பரீட்சை ஊடக மொழி :**

பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு பயிற்று மொழிகளிலும் நடாத்தப்படும்.

**குறிப்பு:-**

i. பரீட்சையில் இடம் பெறும் அனைத்து வினாத் தாள்களுக்கும் ஒரு பரீட்சார்த்தி ஒரே மொழியில் பதிலளிக்க வேண்டும்.

ii. ஒரு பரீட்சார்த்தி தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை பயிற்று மொழியை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்

**9.0 விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

தாம் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படுமளவு விண்ணப்பதாரர் தமது ஆளடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிப்படுத்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

i. ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை
ii. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
iii. செல்லுபடியாகும் இலங்கை வாகன அனுமதிப் பத்திரம்

பரீட்சார்த்திகள் தங்கள் அடையாளத்தைச் சரிபார்ப் பதற்காக முகத்தை மறைக்காமலும் மின்னணுத் தொடர்பு சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதி செய்வதற்காகக் கைகளை மறைக்காமலும் பரீட்சை அறைக்குள் நுழைய வேண்டும். இதற்கு உடன்படாத பரீட்சார்த்திகள் பரீட்சை அறைக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் அவர்கள் பரீட்சை அறைக்குள் நுழைந்த தருணத்திலிருந்து பரீட்சை முடிந்து வெளியேறும் வரை தங்கள் முகத் தையும் கைகளையும் மறைக்காமல் இருக்க வேண்டும்.

**10.0 போலியான தகவல்களுக்கு வழங்கப்படும் தண்டனைகள்:**

விண்ணப்பதாரி ஒருவருக்கு தகைமைகள் இல்லையென கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் என எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரி போலியானவை எனத் தெரிந்து கொண்டே தகவல்களை முன்வைத்தல் அல்லது ஏதேனும் முக்கியமான ஒன்றை வேண்டுமென்றே மறைத்தல் தொடர்பில் கண்டு பிடிக்கப்பட்டால் அரசாங்க சேவையிலிருந்து நீக்குவதற்கு கட்டுப்பட்டு இருத்தல் வேண்டும்.

**11.0 எழுத்துப் பரீட்சை :**

பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்கப்பட்ட சகல விண்ணப்பதாரிகளும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சைக்கு கட்டாயம் தோற்ற வேண்டும். பாடத்திட்டத்தில் பின்வரும் வினாத்தாள்கள் அடங்கியுள்ளன. பரீட்சையானது சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் மட்டுமே நடைபெறும்.

| *பாடங்கள்* | *அதிகபட்ச மதிப் பெண் உச்ச எல்லை* | *குறைந்த பட்ச தேர்ச்சி மதிப்பெண்* |
|---|---|---|
| உளச்சார்பு (Aptitude test) | 100 | 40% |
| பொது அறிவு | 100 | 40% |

**11.1 எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம்**

| *பாடங்கள்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 1. உளச்சார்பு பரீட்சை (Aptitude test) | விண்ணப்பதாரரின் எண் பகுத்தறியும் திறன், பகுத்தறிவு மற்றும் அறிவுசார் அறிவைச் சோதிப்பதன் மூலம் பணியின் கடமைகளுக்கான விண்ணப்பதாரர் அவரது தகுதியையும் ஆற்றலையும் பரீட்சிக்கும் நோக்கில் இது தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் பல தேர்வு மற்றும் சுருக்கமான விடைகேள்விகள் உள்ளடக்கிய ஒரு வினாத்தாள் ஆகும். இதில் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும். |
| 2. பொது அறிவு | இது இலங்கையின் அரசியல் சமூக பண்பாட்டு மற்றும் பொருளாதாரச் சூழல், பாதுகாப்பு மற்றும் தரநிலைகள், அத்துடன் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் உள்ளிட்ட சர்வதேச நடப்பு நிகழ்வுகள் குறித்த பரீட்சை எழுதுபவர் அறிவை பரீட்சிக்கும் நோக்கம் கொண்ட ஒரு பல்தேர்வு மற்றும் சுருக்க விடை வினாத்தாள் ஆகும். |

**12.0 தொழில்முறை பரீட்சை :**

மின்னியல், உலோக வேலை, மோட்டார் இயந்திரம், குளிர்சாதனம் மற்றும் வளி சீராக்கல், கட்டடத் தொழில் மற்றும் தொழில்நுட்ப வரைதல், ஆகிய துறைகளில் விண்ணப்பிக்கும் எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் விண்ணப்பதாரர்கள் தத்தம் பாடப் பிரிவுகளுக்கான தொழிற்கல்வி பரீட்சையில் கலந்து கொள்ள வேண்டும்.

மதிப்பெண் 100 காலஅளவு – அதிகபட்சம் 06 மணி நேரம்

12.1 **பரீட்சை விளக்கம்**

| *பரீட்சை* | *பாடப் பகுதி* | *காலம்* | *மொத்த மதிப் பெண்* |
|---|---|---|---|
| தொழில் முறை பரீட்சை | 1. கட்டடத் தொழில் | அதிக பட்சம் மணி 06 | 100 |
| | 2. தொழில்துறை வரைபடங்கள் | | |
| | 3.மோட்டார் இயந்திரம் | | |
| | 4. குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல் | | |
| | 5. மின்னியல் | | |
| | 6. உலோக வேலை | | |

12.2 தொழில்முறைப் பரீட்சைக்கான தொடர்புடைய தொழில்சார் துறைகள் மற்றும் பாடத்திட்டம்.

| *பாடப் பகுதி* | *பாடத்திட்டம்* |
|---|---|
| 1. கட்டடத் தொழில் | இந்த தொழிற்கல்வி பரீட்சைகள் தற்போது தொழில்நுட்பம் / தொழில்நுட்ப அறிவியல் துறைகளில் உள்ள தேசிய தொழிற்கல்வித் தகுதி மட்டம் 5 (NVQ– 5) பாடநெறிகளில் நடாத்தப்படும் செய்முறைப் பரீட்சைகளுக்கு இணையான மட்டத்தில் நடாத்தப்படும். இதில் பரீட்சார்த்தி தனது தொழில்நுட்ப அறிவு தொடர்பான இயந்திரவியல் சூத்திரங்களை பயன்படுத்துதல், கருவிகளை அடையாளம் கண்டு பயன்படுத்துதல், மற்றும் அந்த கருவிகளையும் உபகரணங்களை பயன் படுத்தி மாணவர்களுக்குத் தனது தொழில்நுட்பத் திறன்களை வெளிப்படுத்துதல் ஆகிய திறன்களில் பரீட்சிப்பர் |
| 2. தொழில்துறை வரைபடங்கள் | |
| 3. மோட்டார் இயந்திரம் | |
| 4. குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கல் | |
| 5. மின்னியல் | |
| 6. உலோக வேலை | |

13.0 நேர்முகப் பரீட்சை :

போட்டிப் பரீட்சையில் திறமை அடிப்படையில் தகைமை பெறுகின்ற விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். (நேர்முகப் பரீட்சைக்காக எவ்வித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது)

14.0 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடை முறைப் படி மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் 03 ஆம் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிப்பது தொடர்பில் உரிய பொது நிபந்தனைகள் மற்றும் 2020.07.06 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 2183/20 ஐக் கொண்ட அரசாங்க வர்த்தமானியின் பொது 01 ஆம் பகுதியின் கீழுள்ள கருத்துக்கு நியமிக்கப்படும் “இலங்கை தொழில்நுட்ப கல்விச் சேவையின் சேவைப் பிரமாணத்தின்பால்” விண்ணப்பதாரிகளின் கவனம் ஈர்க்கப்படுகின்றது தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையான பந்திகளின் பிரிவுகள் பதவிக்குப் பொருத்தமான வகையில் உரித்தாகும்.

15.0 வெற்றிடங்களின் ஒரு பகுதியைப் பூரணப்படுத்து வதற்கான அல்லது சகலதையும் பூரணப்படுத்தாமல் இருப்பதற்கான உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கே உள்ளது.

16.0 இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின் அவ்வேளை சிங்கள மொழி வாசகம் மேலோங்கி நிற்கும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின்
கட்டளையின் பிரகாரம்

செயலாளர்,
கல்வி, உயர்கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சு.

2026

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரசாங்க சேவைகள் ஆணைக் குழு**

**கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**

**தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்**

இலங்கை தொழிலநுட்பக் கல்விச் சேவையின் III ஆம் வகுப்பிற்கான போதனாசிரியர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்புச் செய்யும் (வரையறுக்கப்பட்ட) போட்டிப் பரீட்சை - 2026

| விண்ணப்பிக்கும் பதவி | பதவி இலக்கம் | பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மூலம் |
|---|---|---|
| | | |

01. முதலெழுத்துக்கள் இறுதியில் குறிப்பிடப்பட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம் : SILVA A.B.

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | |

02. முழுப்பெயர் :
..........................................................................................
..........................................................................................

03. (அ) அலுவலக முகவரி :
..........................................................................................
..........................................................................................

(ஆ) தனிப்பட்ட முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :
..........................................................................................
..........................................................................................

(இ) தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் :..........................................................................................

04. (அ) நீர் இலங்கைப் பிரசையா என்பது பற்றி ஆம் ☐ இல்லை ☐

05. பால் : ஆண்/ பெண் :..........................................................................................

06. (அ) பிறந்த திகதி :

வருடம் : ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

(ஆ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

07. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

08. தற்போது வகிக்கின்ற பதவி தொடர்பான விவரங்கள்

(அ) பதவியின் பெயர் மற்றும் நியமனத் திகதி :
(ஆ) பதவி நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா என்பது தொடர்பான விடயம் :
(இ) பதவி ஓய்வூதியத்துடனானதா என்பது தொடர்பிலான விடயம் :
(ஈ) பதவியில் நிரந்தரமாக்கப்பட்டமை தொடர்பான விடயம் :
(உ) திணைக்களம் :
(ஊ) நிறுவனம்/ சேவை நிலையம் :

09. கல்வித் தகைமை தொடர்பான விபரம் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி தொடர்பான சான்றிதழ்கள் உள்ளடக்கி) :

| *சித்தியடைந்த பரீட்சை* | *பல்கலைக்கழகம்/ நிறுவனம்* | *சித்தியடைந்த ஆண்டு* | *பாடத் துறை* | *மொழி மூலம்* |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

10. கற்பித்தல் மற்றும்/ அல்லது கள அனுபவம் தொடர்பான விவரங்கள் :

(உரிய சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

| *கற்பித்த/ சேவைபற்றிய நிறுவனத்தின் பெயர்* | *பதவி* | *பெற்றுக்கொண்ட சான்றிதழ்* | *கால எல்லை* | *பாடத்துறை/ தொழில் துறை* |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |
| 3. | | | | |
| 4. | | | | |

11. ஏற்கனவே தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் முன்னர் வகித்த பதவி (காலப் பகுதி ஒழுங்கின் அடிப்படையில் சரியான திகதியைக் குறிப்பிட வேண்டும்) :

| *திணைக்களம்/ நிறுவனம்* | *சேவை செய்த நிலையம்* | *பதவி* | *நிரந்தரமானதா தற்காலிகமானதா என்பது பற்றி* | *இருந்து* | *வரை* | *கால எல்லை* |
|---|---|---|---|---|---|---|
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |
| 4. | | | | | | |

12. நீர் நீதிமன்றத்தால் குற்றவாளியாக தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ளீரா? ஆம்/இல்லையா?

அவ்வாறு இருப்பின் விபரத்தை குறிப்பிடவும்.

.....................................................................................................................................................................

.....................................................................................................................................................................

13. இதற்கு முன்னர் திணைக்களமொன்றில், கூட்டுத் தாபனமொன்றில் அல்லது சபையொன்றில் சேவையாற்றியுள்ளீரா? ஆம்/இல்லை :

அவ்வாறாயின் அச்சேவையில் இருந்து நீக்கியமைக்கான/ நீக்கப்பட்டமைக்கான காரணத்தைக் குறிப்பிடவும்.

.....................................................................................................................................................................

14. உமக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையொன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதா? ஆம்/இல்லை

அவ்வாறு இருப்பின் விபரத்தை சுருக்கமாகக் குறிப்பிடவும் :

.................................................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையும் உண்மையானவையும் என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல் ஏதேனும் போலியானது அல்லது பிழையானது என நான் தெரிவு செய்யப்பட முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் என்பதை தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது தொடர்பாக தெரியவரின் எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவதற்கு கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சைகள் நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கட்டுப்பட்டுள்ளேன் என்பதையும் அறியத்தருகின்றேன்.

.....................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி :..........................................

---

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தில் பணிபுரியும் விண்ணப்பதாரர்களுக்காக திணைக்களத் தலைவர்/ பணிப்பாளர்/ அதிபர் பரிந்துரை :

மேற்குறிப்பிடப்பட்ட விண்ணப்பதாரி தொடர்பாக தொடர் இலக்கம் 01 முதல் 13 வரை குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை எனவும் சரியான பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................................
திணைக்களத் தலைவர்/ பணிப்பாளர்/ அதிபர்
கையொப்பம்

திகதி :..........................................

திணைக்களத் தலைவரிடமிருந்து சான்றிதழ்

மேலே குறிப்பிடப்பட்ட விவரங்களைக் கொண்ட திரு./ திருமதி/ செல்வி ....................................................................அவர்கள் இந்த நிறுவனத்தில் பணிபுரிகின்றார் என்றும், அவர் மேலே வழங்கிய தகவல்கள் சரியானவை என்றும், இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் தற்போது பணியாற்றும் நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்கப்படலாம் என்று இதன் மூலம் நான் சான்றழிக்கின்றேன்.

.....................................................
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

பெயர் :..........................................
பதவி :..........................................
முகவரி :..........................................
திகதி :..........................................
பதவி முத்திரை

07-46/2

## கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) (இலங்கை தொழில்நுட்ப சேவை) பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2026

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. ஆட்சேர்ப்பானது போட்டிப்பரீட்சையின் பெறு பேறுகளினடிப்படையில் இடம்பெறுவதுடன் அப்போட்டிப் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2026, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

விண்ணப்பப்படிவமானது இலங்கை பரீட்சைகள் திணைக் களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Applications-Recruitment Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் நிகழ்நிலை (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்பு 2026, யூலை மாதம் 06 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு ஆரம்பமாகி 2026, ஓகத்து மாதம் 03 ஆம் திகதி மு.ப.9.00 மணியுடன் முடிவடையும்.

தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் விண்ணப்பிப்பதாயின், விண்ணப்பப்படிவத் தின் பிரதியை தமது தனிப்பட்ட கோவையில் சேர்ப்ப தற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத் தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதம் ஆகியவற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் ஏதேனும் பாதகமான விளைவு களை விண்ணப்பதாரரே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) பதவியில் காணப்படுகின்ற 01 வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அவசி யமான தகைமைகளை பூர்த்தி செய்கின்ற தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கட்டிட நிர்மாணம்,நவீனமயப்படுத்தல் மற்றும் பழுது பார்த்தல் என்பவற்றிற்கான மதிப்பீட்டினை தயார் செய்தல், அளவிடுதலும் மட்டமிடுதலும், அளவீட்டு ஆய்வுகள், கட்டிட வடிவமைப்பு மற்றும் தூய்மைப்படுத்தும் பணிகளை வழிநடத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகிய கடமைகளை உள்ளடக்கிய ஒரு பதவியாகும்.

01. **சேவை விதிமுறைகள் :**

அரசாங்க சேவை நியமனங்களை மேற்கொள்ளும் போது ஏற்புடையதாகின்ற பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக் கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு விதிமுறையில் குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) (இலங்கை தொழில்நுட்ப சேவை) பதவிக்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்தானதுமாகும்.

02. **சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம் :**

**சம்பளக் குறியீட்டு இலக்கம்** : MN 3-2025

**சம்பள அளவுத்திட்டம்** : ரூ. 52,250.00 – 10 × 800 – 11 x 1,190 – 10x1,320 – 10x1,350 – ரூபா 100,040.00

03. **கல்வித் தகைமைகள் :**

தூய கணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல்/பொறியியல் தொழில்நுட்ப வியல்/தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் போன்ற பாடங்களில் 02 பாடங்கள் உள்ளடங்களாக 03 பாடங் களில் க.பொ.த. (உ./த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்திற்கு சிறப்புத் தேர்ச்சி ஒன்றுடன் ஒரே தடவையில் (06) ஆறு பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

04. **தொழில் தகைமைகள் :**

i. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற கட்டிடப் பொறியியல் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

ii. தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற்பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற கட்டிடப்; பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா

அல்லது

iii. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப் படுகின்ற கட்டிடப் பொறியியல் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

iv. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப் படுகின்ற கட்டிடப் பொறியியல் பரீட்சையின் I ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.

05. **அனுபவம்** : ஏற்புடையதன்று

06. **உடல் தகைமைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.

07. **வேறு :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.

(ii) சிறந்த குணம் கொண்டவராயிருத்தல் வேண்டும்..

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற முடிவுத் திகதிக்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதி முறைகளிற்கு அமைவாக ஒழுக்காற்று தண்டனை யொன்றை பெற்றிராதிருத்தல். (தற்போது அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள்)

08. **வயது எல்லை** :

விண்ணப்ப முடிவுத்திகதிக்கு 18 வயதிற்கு குறையாது மற்றும் 30 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (அதற்கமைவாக வயது தொடர்பான தகைமை பூர்த்தி செய்யப்படுவதற்கு 2008.08.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1996.08.03 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்)

09. **ஆட்சேர்ப்பு முறைமை** :

எழுத்துப் பரீட்சையொன்றினதும் பொது நேர்முகத் தேர்வொன்றினதும் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளி களின் திறமைத் தொடருக்கமைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையானோரை நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தி தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(அ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப் படும்.

(ஆ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரி ஒருவர் தான் கோரிய ஊடக மொழியில் அனைத்து வினாப் பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டுமென்பதுடன், விண் ணப்பபடிவத்தில் குறிப்பிடும் மொழி ஊடகத்தை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

10. **எழுத்துப் பரீட்சை :**

| *வினாப் பத்திரம்* | *காலம்* | *மொத்த மதிப் பெண்கள்* | *தேர்ச்சி மதிப் பெண்கள்* |
|---|---|---|---|
| நுண்ணறிவு மற்றும் உளச்சார்பு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| விடயம் சார் தொழில்நுட்ப பரீட்சை | 02 மணித்தியாலம் | 100 | 40% |

பாடத்திட்டம் கீழ் காட்டப்பட்டுள்ளது.

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவு மற்றும் உளச்சார்பு | எண்திறன், பிரச்சினை தீர்த்தல், பகுத்தறியும் திறன் மற்றும் பொது அறிவு ஆகிய தலைப்புகளின் கீழ் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாப் பத்திரம் |
| விடயம் சார் தொழில்நுட்ப பரீட்சை | **I ஆம் பகுதி**<br>சுற்றாடல்,அறிவியற் கண்டுபிடிப்புகள்,விஞ்ஞான அறிவு,சர்வதேச தகவல்கள் தொடர்பான பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியது (01 மணித்தியாலம்)<br>**II ஆம் பகுதி**<br>விடயம் சார் கட்டமைப்பு அல்லது பகுதி கட்டமைப்பு வினாக்களை உள்ளடக்கியது (01 மணித்தியாலம்) |

11. **பொது நேர்முகத் தேர்வு** : ஏற்புடையது

12. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)

ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை / Flex செயலி மூலம் (Online Banking Method, Bank of Ceylon /Flex App)

iv. Flex செயலி மூலம் (Flex App 0f Bank of Ceylon)

v. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாக குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக்கான மொத்தப் பணத்தையும் செலுத்த வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணத்தை எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றம் செய்யவோ முடியாது.

13. **விண்ணப்பிக்கும் முறை :**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவம் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது தொகுதியினுள் உள்நுழைவதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலமோ மின்னஞ்சல் (E-mail) செய்தியாகவோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் படிவத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்க. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை ஒழுங்காக பின்பற்றுக. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றை பெற்றதன் பின்னர் அதில் செய்யப்படுகின்ற எவ்வித திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

14. **பரீட்சைக்கு பிரவேசித்தல் :**

(அ) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கூட்டிய அனுமானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி, அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரமே பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் இணையவழியாக மாத்திரம் வழங்கப்படும். பரீட்சை அனுமதிப்பத்திரங்கள் வெளியிடப்பட்டவுடன், இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது குறித்து இணையத்தள அறிவித்தல் மூலமாக அல்லது விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாக அறிவிக்கப்படும். அனுமதிப் பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர் எவராவது இருப்பின், இணையத்தள அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு அது குறித்து இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஏற்பாட்டு கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய ஆளடையாள அட்டை எண் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு, ஒரு கோரிக்கை கடிதத்தை இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அவ்வாறு வினவும் போது, பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியொன்றை தன்னிடம் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதிப் பத்திரத்தைப் பரிசீலித்து, அதில் ஏதேனும் திருத்தங்கள் இருப்பின், போதிய கால அவகாசம் இருக்கும் போதே பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்பு கொண்டு விண்ணப்பத்திற்கு ஏற்ப உரிய திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்திலோ அல்லது நேர்முகப் பரீட்சையின் போதோ திருத்தங்கள் கோரி செய்யப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தனக்குரிய பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுகின்ற முதல் நாளில் மண்டப அதிபரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய பரீட்சை அனுமதிப்பத்திரத்தை ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சை தொடர்பாக

பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பொன்று இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரியொருவருக்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதற்கான அங்கீகாரமாக கருதப்படல் கூடாது.

(ஈ) அனுமதிப் பத்திரத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் அரசாங்க நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒரு விண்ணப்பதாரர், தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவராலும், அவ்வாறு இல்லாத ஏனைய விண்ணப்பதாரர்கள், தமது கையொப்பத்தை பிரிவின் கிராம அலுவலர், அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது நாயக்க தேரர் அல்லது ஏனைய மதங்களைச் சேர்ந்த உயர் அந்தஸ்திலுள்ள மதகுரு ஒருவராலும் அத்தாட்சிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

(உ) பரீட்சை நடாத்துகை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் மீறினால், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உள்ளாக நேரிடும். பரீட்சை முடிவுகள் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

15. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப அதிபர் திருப்தியடையக்கூடிய சுய அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக கீழ் காட்டப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு
iii. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அதேபோன்று, பரீட்சார்த்திகள் தங்களின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் முகத்தை மூடாமலும், மின்னணு தகவல் தொடர்பு சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். இதற்கு உடன்படாத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த கணத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

16. **கவனிக்க வேண்டியவை :**

அ. கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது. .

ஆ. தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள், பரீட்சை விண்ணப்பப் படிவத் தின் பிரதியொன்றைத் தங்களது தனிப்பட்ட கோப்பில் உட்படுத்துவதற்காக உரிய அதிகாரி களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப் பத்தில் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத் தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் சேவை உறுதிப்படுத்தல் கடிதம் என்பவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. **நியமனத்திற்காக தெரிவு செய்தல் :**

எழுத்துப் பரீட்சையொன்றினதும் பொது நேர்முகத் தேர்வொன்றினதும் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தி யடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடரிற்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையானோரை பொது நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

18. **பெறுபேறுகளை வெளியிடுதல் :**

உரிய பெறுபேற்றுப் பத்திரத்தை "பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களம்" அவர்களிடம் ஒப்படைப்பதற்கு மேலதிகமாக, கடற் றொழில் மற்றும் நீரியல் வளத் திணைக்களத்தின் உடன்பாடு எட்டப்பட்ட பின்னர், பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகளை அறிவித்தல் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத் தளத்தின் ஊடாக வெளியிடுதல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

19. **போலியான தகவல்களை வழங்குதல் :**

விண்ணப்பதாரியொருவர் தகைமையற்றவரென வெளிப்படுத்தப்படுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவரு டைய விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு

இடமுண்டு. விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பித்துள்ள யாதேனுமொரு விடயம் அது பொய்யானதென்பதை அறிந்தே சமர்ப்பித்திருப்பதாக வெளிப்படுத்தப்படின் அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கு இடமுண்டு. இவ்வொழுங்குவிதிகளில் கருதப்பட்டிராத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்

20. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் ஒவ்வொரு மொழி வெளியீட்டிலும் ஏதேனும் ஒவ்வாமை/பொருத்தமின்மைகள் ஏற்படின் சிங்கள மொழிமூல அறிவித்தல் வலுவானதாகும்.

பணிப்பாளர் நாயகம்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
2026.06.18.

07-126

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்**.

### அட்டவணை - 2026

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 03.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2026 |
| | | வெள்ளி | 10.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2026 |
| | | வெள்ளி | 17.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2026 |
| | | வெள்ளி | 24.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2026 |
| | | வெள்ளி | 31.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2026 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 07.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2026 |
| | | வெள்ளி | 14.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.07.2026 |
| | | வெள்ளி | 21.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2026 |
| | | வெள்ளி | 28.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2026 |
| **செத்தெம்பர** | .. | வெள்ளி | 04.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.08.2026 |
| | | வெள்ளி | 11.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.08.2026 |
| | | வெள்ளி | 18.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.09.2026 |
| | | வெள்ளி | 25.09.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.09.2026 |

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.